பக்கங்கள்: பதினாறு+IV=20

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 24 வள்ளுவர் ஆண்டு 2039 மார்கழி 17 வியாழக்கிழமை (01.01.2009) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்:036

# மக்களுக்கு நிலையான சமாதானம் கிடைக்குமென ஜனாதிபதி நம்பிக்கை

## புத்தாண்டுச் செய்தியில் அவர் தெரிவிப்பு



கொழும்பு, ஜனவரி1

மிகுந்த எதிர்பார்ப்புக்களுடனும் நம்பிக்கைகளோடும் நாம் கடந்து வந்த பயணத்தில் எமது நாட்டுக்கும் எமது மக்களுக்கும் நிலையான சமாதானம் ஏற்படும் என்ற நம்பிக்கை எம்மிடம் உள்ளது. நீதியும் கௌரவமுமான சமாதானத்தை எதிர்பார்த்திருந்த மக்களுக்கு இது மகிழ்ச்சி தரக்கூடியதாகும் என்பது எனக்குத் தெரியும்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமது புத்தாண்டுச் செய்தியில் இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

எதிர்காலத்தில் மென்மேலும் பாரிய வெற்றிகளைப் பெறுவதற்கு எமக்கி டையே உள்ள எல்லா வேறுபாடுகளையும் மறந்து ஒன்று பட்டுச் செயற்பட வேண்டும் -என்றும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சியில் இரு சடலங்கள் நேற்றுக் கரை ஒதுங்கின

வடமராட்சி கடற்பகுதியில் இரு சடலங்கள் நேற்றுக் கரை ஒதுங்கின.

சக்கோட்டைக்கடற்பகுதியில் ஒருசடலமும், பருத்தித்துறை முனை வெளிச்ச வீட்டுப் பகுதியில் ஒருசடலமும் கரை ஒதுங்கின. இச்சடலங்களை மீட்ட பருத்தித்துறை பொலிஸார் அவற்றை பருத்தித் துறை வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

(மற்றொரு செய்தி 3 ஆம் பக்கத்தில்)

**உதயன் நாள் காட்டி - 2009**

**வாசகர்களே!**

2009 ஆம் ஆண்டுக்குரிய உதயனின் பலவர்ண நாள்காட்டி உள்ளே இணைக் கப்பட்டுள்ளது.




# தமிழரின் அபிலாஷை நிறைவேறும் வரை எங்கள் போராட்டத்தைத் தொடருவோம்

## புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன்



கிளிநொச்சி , ஜனவரி1

''நாங்கள் சகல வகையான மோதல்களுக்கும் யுத்தங்களுக்கும் பழக்கப் பட்டவர்கள். எமது மக்களின் உதவியுடன் அவர்களது அபிலாஷைகளை நிறைவேற்றும் வரை போராட்டத்தைத் தொடருவோம்'' என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா. நடேசன் தெரிவித்துள்ளார்.

அசோசியேட்டட் பிரெஸ் செய்திச்சேவைக்கு மின் அஞ்சல் மூலம் கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகள் உடனடி இராணுவ தோல்வியொன்றை எதிர்நோக்குகின்றனர்

(16 ஆம் பக்கம் பார்க்க)

# வன்னியில் விமானங்கள் குண்டு மழை தாய், மகள் உட்பட நால்வர் கோரப் பலி

## 20 பொதுமக்கள் படுகாயம்; செஞ்சிலுவை சேவை நிலையமும் நாசம்

கிளிநொச்சி, ஜன.1

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள கிளிநொச்சி, பரந்தன் - முல்லைத்தீவு பிரதான வீதியில் உள்ள முருகானந்தன் வித்தியாலயத்திற்கு அருகில் உள்ள மக்கள் குடியிருப்புப் பகுதிகள் மீதும் முரசுமோட்டை சேந்தாங்கண்டி அம்மன் கோவில் பகுதியில் அமைந்துள்ள மக்கள் குடியிருப்புப் பகுதிகள் மீதும் கரைச்சிப் பகுதியிலும் நேற்றுக்காலை 8 மணிமுதல் அரச விமானங்கள தாக்குதல்களை நடத்தின.

முருகானந்தன் வித்தியாலயத்திற்கு அருகில் நடத்தப்பட்ட தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய் மற்றும் மகள் உட்பட நால்வர் கொல்லப்பட்டனர்; 20 பேர்வரை படுகாயமடைந்தனர்.

ஜூடா மக்கிரட் ஆசீர்வாதம் (வயது - 24), அவருடைய தாயார் ஆசீர்வாதம் மாரியம்மா (வயது - 55), மார்க்கண்டு சிவநந்தன் ஆகியோர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். சந்திரபோஸ் (வயது - 52) என்பவர் படுகாய மடைந்த நிலையில் தர்மபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி அங்கு உயிரிழந்தார்.

படுகாயமடைந்தவர்கள் தர்மபுரம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். எனினும் வைத்தியசாலையில் இரத்தம் கையிருப்பில் இல்லாத

(16 ஆம் பக்கம் பார்க்க)

## பரந்தன் தன்வசம் என்கிறது படைத்தரப்பு; எதிர்த்து தாக்குதல் நடத்துவதாகப் புலிகள் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 01

கிளிநொச்சி மாவட்டத் தில், பரந்தன் நகரை நேற்று மாலை இராணுவத்தினர் கைப்பற்றியிருக்கின்றனர் எனப் படைத்தரப்பு நேற்றிரவு செய்தி வெளியிட்டுள்ளது.

பரந்தனைப்பிடிக்கும் முழு வீச்சில் இராணுவத்தி னர் விடுதலைப் புலிகளின் எதிர்ப்பை முறியடித்து வெற் றிகரமாக அங்கு நுழைந்து விட்டனர் எனவும் அந்தச் செய்தி தெரிவித்தது.

(16 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் கைக்குண்டுத் தாக்குதல்; 14 படையினர் காயம்

கொழும்பு, ஜன.1

வவுனியா, கறுவல் புளியங்குளம் பகுதியில் இராணுவத்தினர் பயணித்த கவசவாகனம் ஒன்றை இலக்கு வைத்து நடத்தப்பட்ட கைக்குண்டுத்தாக்குதலில் 14 படையினர் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

நேற்றுமாலை இடம்பெற்ற (16 ஆம் பக்கம் பார்க்க)

# செலான் வங்கியின் சேவைகள் தடங்கலின்றி வழமைபோல் சுமுகமாக நடைபெறும்

## வாடிக்கையாளரை அச்சமுறவேண்டாம் என்கிறார் மத்திய வங்கி ஆளுநர்

கொழும்பு, ஜன.1

செலான் வங்கியின் செயற்பாடுகள், இது வரை காலமும் நடைபெற்று வந்தமை போலவே, எவ்வித இடையூறோ, தடங்கலோ இன்றி தொடர்ந்தும் வழமை போன்று சுமுகமாக நடைபெறும்.

அதன் வங்கி நடவடிக்கைகள் குறித்து எவரும் அச்சமுறத் தேவையில்லை என்பதனை அதன் வாடிக்கையாளர்களுக்கும் பொதுமக்களுக்கும் இலங்கை மத்திய வங்கி உறுதியளித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் தலைமையில் செலான் வங்கியின் புதிய இயக்குநர்களின் கூட்டம் கடந்த திங்கட் கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் செலான் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி அஜித பஸ்குவல் கூட்டு முகாமைத்துவமும் வங்கி

(16 ஆம் பக்கம் பார்க்க)

# மத்திய, வடமேல் மாகாணங்களில் பெப்ரவரி 14 ஆம் திகதி வாக்களிப்பு

கொழும்பு, ஜன.1

வடமேல் மற்றும் மத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல் பெப்ரவரி மாதம் 14 ஆம் திகதி நடைபெறுமென தேர்தல்கள் ஆணையகம் நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளது.

இவ்விரு மாகாணசபைத் தேர்தல்களுக்கான வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யும் தினம் நேற்றுடன் முடிவடைந்தது.

மனுத்தாக்கல் முடிவடைந்த கையோடு பிரசாரப் பணிகளில் அரசியல் கட்சிகளும் சுயேச்சைக் குழுக்களும் மும்முரமாக இறங்கியுள்ளன.

மத்திய மாகாணசபைக்கு 56 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படவுள்ளனர். நுவரெலியா, கண்டி, மாத்தளை மாவட்டங்களைச் சேர்ந்த 17 லட்சத்து 46 ஆயிரத்து 466 பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளனர்.

வடமேல்மாகாண சபைக்கு 50 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்படுவர். குருநாகல், புத்தளம் மாவட்டங்களைச் சேர்ந்த 16 லட்சத்து 61 ஆயிரத்து 733 வாக்காளர்கள் இவர்களைத் தெரிவுசெய்யவுள்ளனர்.

(அ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



கைதடி வடக்கைச் சேர்ந்த கௌரீசன் சாவகச்சேரியைச் சேர்ந்த தீபா தம்பதியினரின் செல்வப் புதல்வன்

## டனுசிகன் (டனுஷ்)

தனது முதலாவது பிறந்தநாளை அவரது இல்லத்தில் இன்று (01.01.2009) வியாழக்கிழமை வெகுவிமரிசையாகக் கொண்டாடுகின்றார். டனுஷ் குட்டியை அன்பு அப்பா, அம்மா, அண்ணா ஹரிஸ் குட்டி மற்றும் அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, ஜேர்மனியில் வசிக்கும் பரதன் மாமா, மதி அத்தை, மோகனன் மச்சான், நித்து மச்சான், தரணி மச்சி, நோர்வேயில் வசிக்கும் மதி மாமா, சுகி அத்தை, கௌசி மச்சி, பவிஷா மச்சி, France இல் வசிக்கும் பரன் சித்தா, நோர்வேயில் வசிக்கும் சிவாசித்தா, London இல் வசிக்கும் கரன் மாமா மற்றும் தர்ஷி அத்தை, London இல் வசிக்கும் மோகன் சித்தா, சூட்டி அன்ரா, நர்மிதா அக்கா, நந்திதா அக்கா மற்றும் Colombo இல் வசிக்கும் துஷா அன்ரா உற்றார், உறவினர் அனைவரும் "பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ" வாழ்த்துகின்றனர்.

கொழும்பு. **அப்பம்மா.**

### அரச அதிபரின் சேவை 6 மாத காலம் நீடிப்பு

யாழ். அரச அதிபர் கே.கணேசின் சேவைக்காலம் மேலும் மோத காலத்துக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

அவரது சேவைக் காலம் ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் டி.திஸநாயக்க அறிவித்துள்ளதாக செயலக நிர்வாக உத்தியோகத்தர் என். செல்லையா தெரிவித்தார். (01)

## துளிர்கள் நிறுவன அறிவித்தல்

★ அனேக மாணவர்களின் வேண்டு கோளுக்கிணங்க....!

★ உள சமூக தொழில் வாண்மை கற்கை நெறியைத் தொடர்வதற்கு

**G.C.E. O/L படித்தவர்களையும், முன்பள்ளி ஆசிரியர்களையும்**

இணைத்துக் கொள்ள தீர்மானிக்கப் பட்டுள்ளதால் எதிர்வரும் 07.01.2009 இற்கு முன் இருபாலாரும் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கலாம். அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

118, பலாலி வீதி,
திருநெல்வேலி.

இயக்குநர்
துளிர்கள்.

## இன்று முதல் எமது வாடிக்கையாளர்களின் நலன் கருதி ஓர் புதிய உதயம்

**Teknel Computers & Technologies**

POINT PEDRO ROAD,
POINT PEDRO.
☎: 0602210384
(AGA office அருகாமையில்)

**JAFFNA**

**MARSHA SYSTEMS (PVT) Ltd**
74, Kannathiddy Road, Jaffna.
☎: 021 222 9418

**NELLIYADY**

**Teknel Computers & Technologies**
364, Kodikamam Road, Nelliyady.
☎: 060 221 6406

## அபிவிருத்தி அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

1050 நிலம்

வெற்றி இலக்கங்கள்

மிதுனம் 15 18 36 49

**30-12-2008**

செல்லுபடியாகும் தொடர் இல. 400329560 - 400350781

ஜக்பொட் பரிசு ரூபா. 12,973,705/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 232,789 | 20/- | 4,655,780/- |
| 2 இலக்கங்கள் | 21,418 | 40/- | 856,720/- |
| 1 இல. + லக்கினம் | 21,314 | 60/- | 1,278,840/- |
| 2 இல. + லக்கினம் | 1,920 | 200/- | 384,000/- |
| 3 இலக்கங்கள் | 565 | 1000/- | 565,000/- |
| 3 இல. + லக்கினம் | 53 | 10,000/- | 530,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 12,973,705/- | - |
| மொத்தம் | | | 8,870,340/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 278,067 | | 9,370,340/- |

இந்த வெள்ளிக்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 13,493,755/-

தொடர் இலக்கம் 500343830 க்கு மேற்பட்ட சிவப்பு நிற டிக்கட்டுக்கள் 2009 ஜனவரி 02 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| குருநாகல் | 400345708-6-23 |
| மாத்தளை | 400336123-9-00 |
| களுத்துறை | 400330030-6-37 |
| கண்டி | 400338679-0-28 |
| புத்தளம் | 400334435-1-35 |

வளமான வாழ்விற்கு

அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03

## PERSONAL CLASS

புதிய ஆண்டிற்கான தரம் 1-12 வரையான மாணவர்களுக்கு English personal class உம் Spoken With Grammar கற்க விரும்புபவர்களுக்கு வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
(O/L எடுத்த மாணவர்களுக்கு அரிய வாய்ப்பு)
தொடர்பு: கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
T.P. 077 1880466

**காணவில்லை** சிவப்பு நிறம், வெள்ளை நிற நெற்றிச்சுட்டி, ஊர் இனம், கன்று ஈனும் நிலையிலுள்ள பசுமாடு ஒன்று கடந்த வியாழக்கிழமை முதல் காணவில்லை. கண்டவர்கள் கீழ்க்காணும் முகவரிக்கு அறியத்தரவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

சி.சசிலலிதா, செங்குந்தா வீதி,
திருநெல்வேலி. தொ.பே: 0779672155

## மரண அறிவித்தல்கள்

### யோக்கியசிங்கம் சுதர்சன்

4ஆம் கட்டை, ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோக்கியசிங்கம் சுதர்சன் 30.12.2008 செவ்வாய்க்கிழமை அகாலமரணமானார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (02.01.2009) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணியளவில் காக்கைதீவு மயானத்தில் அடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

4ஆம் கட்டை,
ஆனைக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி செல்லத்துரை தங்கலட்சுமி (பவளக்கா)

கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும் கோணாவளை ஒழுங்கை, கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லத்துரை தங்கலட்சுமி நேற்று (31.12.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாபதிப்பிள்ளை - செல்லாச்சி தம்பதியினரின் மகளும் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - தங்கம்மா தம்பதியினரின் மருமகளும் பிரபல வர்த்தகர் கோணாவளை செல்லத்துரையின் பாசமிகு மனைவியும் பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான கனகசபாபதி, அருமைநாயகம் மற்றும் மகாலிங்கம், தேவமனோகரி, சோதிமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும் அன்னலிங்கம், புவனேஸ்வரி, இராஜேஸ்வரி, சிவனேஸ்வரி மற்றும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டேசகர், இராஜரட்ணம் ஆகியோரின் அன்பு மாமியாரும் பரராஜசிங்கத்தின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.01.2009) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

தகவல்:
மகாலிங்கம் (மகன்),
அன்னலிங்கம் (மருமகன்).

## இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் - யாழ்.கிளை

**Pharmacist (மருந்தாளர்)**

மேற்படி பதவிக்காக பயிற்சி பெற்ற சான்றிதழ் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் முகவரிக்கு 07.01.2009 இற்கு முன்னதாகச் சான்றிதழ்களுடன் அனுப்பி வைக்கவும்.

கிளை நிறைவேற்று உத்தியோகத்தர்,
இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், 73, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா வல்லிபுரம்



கரம்பகம், மிருசுவிலைச் சேர்ந்த கந்தையா வல்லிபுரம் (மணியம்) நேற்று (31.12.2008) புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மகனும், காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் மாரிமுத்து தம்பதியரின் மருமகனும் செல்லம்மாவின் அன்புக் கணவரும் செல்வறஞ்சினி (சுவிஸ்), மதிவதனி (சுவிஸ்), மதிலோஜினி (ஆசிரியர், சாவகச்சேரி மகளிர் கல்லூரி), மதிவழகன் (லண்டன்), மதனிகா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மனோகரன் (சுவிஸ்), அரியரட்ணம் (சுவிஸ்), லோகிசன் (Micro Computer, யாழ்ப்பாணம்), விஜித்தா (லண்டன்), ராகவன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் காலஞ்சென்ற நாகரத்தினத்தின் (சுந்தரி) அன்புச் சகோதரனும் சிவக்கொழுந்து, கந்தசாமி, தில்லைநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் பேரின்பராசா (ஓய்வுபெற்ற கிராம உத்தியோகஸ்தர், மிருசுவில்), ராசமலர், பாமதி ஆகியோரின் அன்புச் சகலனும் சரவணன், சாரங்கன், சாரூதீபன், அபிராமி, அர்ச்சுனா, அரிகணன், அகீபன், சாரூகேசி, திலக்ஷன், சியானு, துஷ்யா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.01.2009) வியாழக்கிழமை ந.ப. 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிரந்தர முகவரி.
கரம்பகம், மிருசுவில்.
தற்காலிக முகவரி.
இல. 74/12, ஆத்திசூடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

தகவல்:
மகள், மருமகன்.

### திருமதி தனலட்சுமி பசுபதிநாதஐயர்

அளவெட்டி வடக்கு, தவளக்கிரி முத்துமாரியம்மன் கோயிலடியைச் சேர்ந்த திருமதி தனலட்சுமி பசுபதிநாதஐயர் சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரமலை - இராசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் சொக்கலிங்கக் குருக்கள் - மாசிலாமணி அம்மா தம்பதிகளின் மருமகளும் காலஞ்சென்ற சொ.பசுபதிநாதஐயரின் அன்பு மனைவியும் மகேசனின் (இராமநாதன் கல்லூரி) அன்புத் தாயாரும் மாளவிகாவின் மாமியாரும் சாம்பவி, வைஷ்ணவி ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.01.2009) வியாழக்கிழமை பி.ப 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

தவளக்கிரி முத்துமாரியம்மன் கோயிலடி,
அளவெட்டி வடக்கு.

தகவல்:
ப.மகேசன் (மகன்).

## இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 10 ★ 01 ★ 1955



மறைவு 25 ★ 12 ★ 2006

**அமரர் முத்து அப்புக்குட்டி துரைச்சாமி**
(இலங்கை வங்கி பாதுகாப்பு உத்தியோகத்தர்)
திதி - பஞ்சமி (01.01.2009)

அன்பின் உறைவிடமே
பாசத்தின் பிறப்பிடமே
குடும்பத்தின் குலவிளக்கே
எத்தனை ஆண்டுகள் சென்றாலும்
உம் நினைவுகள் எம்மை
விட்டு என்றுமே நீங்காது.

"புஸ்ப மஹால்"
அம்பாள் வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

என்றும் உம்மை மறவா
குடும்பத்தினர்.

கிறிஸ்மஸ் முதல்

முதன் முறையாக யாழ்.மாவட்டத்தில்....

மாபெரும் பரிசுகளுடன்

விரையுங்கள்....
ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் அதிகூடிய பங்குலாபம்

கிறிஸ்மஸ் மற்றும் புதுவருடத்தினை முன்னிட்டு

**சிறிலங்கா இன்சூரன்ஸ்**
***MAK Cost Cutter Super Market***

உடன் இணைந்து நடத்தும் மாபெரும் விற்பனைத் திருவிழா

18.12.2008 முதல் 18.01.2009 வரை

*You are Safer with the Leader*

வருட இறுதியில் மாபெரும் சீட்டிழுப்பில் 2 மில்லியன் ரூபா வரையான பரிசில்கள்

என்றுமே இல்லாதவாறு குறைந்த கட்டுப் பணத்தில் கூடிய காப்புறுதித்தொகை

பொங்கல் வரை

உங்களின் காலவாதியான காப்புறுதிப் பத்திரங்களை புதுப்பிக்க ஓர் சந்தர்ப்பம்

(நிபந்தனைகளிற்குட்பட்டது)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் புதுவருடச் சிறப்பு மலர் - 2009

## இருள் நீங்கி நன்மைகள் நிறைந்த நல்லாண்டு பிறக்கட்டும்



இன்று புதுவருடம் பிறந்திருக்கின்றது. இதுவரை காலமும் பட்ட இன்னல்களும் இடுக்கண்களும் அறவே நீங்கப் பெற்று, இனியாவது நன்மைகள் நிறைந்த நல்ல சுக வாழ்வு மலரவேண்டுமென்ற தீர்க்கமான நல்லெண்ண உணர்வு கொண்ட மக்களின்முன் நம்பிக்கைக் கீற்றுடன் உதயசூரியன் கீழ்வானத்திலே உதித்துக் கதிர்களைப் பரப்ப அவனை இன்முகத்துடன் வரவேற்று உளப்பூரிப்புடன் எமது அருளாசிகளை வழங்குவதில் நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

பூமியில் மானிட ஜென்மம் அரிதான ஒன்று. எனவே வாழ்க்கைப் பாதையிலே வருகின்ற கரடுமுரடான மேடு பள்ளங்களை அதிவிவேகத்துடன் கடந்து நல்ல இனிய இன்ப வாழ்க்கை மலரவேண்டும் என்று நல்லைக் குருமணியின் பாதம் பணிந்து எல்லாம் வல்ல நல்லைக் கந்தனின் இன்னருள் வேண்டி உளமாரப் பிரார்த்தித்து அருளாசிகளை நல்கி இறும்பூதெய்துகின்றோம்.

நல்லதையே நினைந்து நன்மைகளைச் செய்து நாட்டில் அமைதியும் சுபிட்சமும் மகிழ்ச்சியும் சமாதானமும் நிலவ ஈடிணையற்ற இறையருளை நாடி இன்னருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்; வாழ்த்துகின்றோம்.

'என்றும் வேண்டும் இன்ப அன்பு'

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய சுவாமிகள்,
இரண்டாவது குருமஹா சந்நிதானம் நல்லை
திருஞானசம்பந்தர் ஆதீனம்,
யாழ்ப்பாணம்.

## நம்பிக்கை இழக்காது வாரீர்; புத்தாண்டுக்குள் பூரிப்புடன் புகுவோம்!



2008 ஆம் ஆண்டு கையசைத்து விடைபெறுகிறது. 2009 என்கிற புரியாததொரு புதிய ஆண்டிற்குள் இறைவன் எம்மை அழைத்துச் செல்கின்றார்.

நடைபெறும் யுத்தங்கள், பொருளாதார நலிவு, பேரழிவுகள், எதிர்காலப் பயங்கள், குடாநாட்டின் வாழ்வாதார சவால்கள் இவை எம் நாளாந்த யதார்த்தங்கள்.

"உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை, அச்சமில்லை, அச்சமென்பது இல்லையே!" இது பாரதியார் அஞ்சும் மாந்தருக்கு அளித்த நம்பிக்கையின் உறுதிமொழிகள்.

'கனவு காணுங்கள், எதிர்காலம் சிறப்புறும்' என்ற விஞ்ஞானி அப்துல் கலாமின் அனுபவ வார்த்தைகள், அக்கனவு மெய்ப்பட வேண்டும் என பாரதியார் உரமிடுகிறார்.

சந்திரன் எமக்கு வெகுதூரமில்லை என சிந்திக்கத் தொடங்கிய மனிதன் அங்கு தன்கால் பதித்து "முடியும்" என்பதை நிரூபித்தான்.

இமயத்தின் உச்சியை அடையலாம் என முயற்சித்த மனிதன் இமயத்தில் ஏறி அதன் உச்சியில் கொடி ஏற்றி வெற்றிக்களிப்பில் மகிழ்ந்தான்.

தோல்விகள் தொடர்கதைகள் ஆனால் என்ன? முயற்சி மெய்வருத்தக் கூலிதரும் என்ற கூற்று பொய்ப்பதில்லை. ஏறிவந்த படிக்கட்டுக்கள், தூண்டிவிட்ட சிந்தனைகள், நம்பிக்கை அளித்த உள்ளங்கள், சுமைகளை இறக்கிவைக்க உதவிய சுமைதாங்கிகள் எல்லாம் மனிதருக்கு முக்கியம்.

நாளை நல்வழி பிறக்கும்!, என்கிற நம்பிக்கை அனைவருள்ளும் இருக்கட்டும்.

இறைவனுக்கு உகந்த மனிதர்களாக, இறைவனின் படைப்பைப் பாதுகாத்து, எம்மோடுவாழ இறைவன் தந்துள்ள மனிதருடன் நல்லுறவைப்பேணி வாழுமிடத்து இறைவனின் ஆசீர் என்றும் எப்போதும் நம்மனைவரோடும் இருக்கும்.

பிறக்கும் புதிய ஆண்டு யாவருக்கும் வேண்டிய சமாதானத்தையும் அமைதியையும் அளிப்பதாக அமையட்டும்.

வண.செ.பி.நேசகுமார்,
குருமுதல்வர்,
இலங்கைத்திருச்சபை.

## நம்பிக்கை ஒளி பரவட்டும்



மக்கள் யாவரும் 2009 ஆம் ஆண்டாகிய புத்தாண்டில் காலடி எடுத்து வைக்கும் இந்நன்னாளில் பழையன கழிந்து புதியன புகுந்து வாழ்க்கைநெறி நம்பிக்கை என்ற ஒளிக்கீற்றை எதிர்நோக்கிச் செல்ல இறையருள் புரிவதாக. மக்கள் மத்தியில் ஒற்றுமை, புரிந்துணர்வு, மனிதநேயம், சகிப்புத்தன்மை ஆகியன ஏற்பட்டு நல்லனவற்றைச் சிந்தித்து, திண்ணிய நெஞ்சத்துடன் தெளிந்த நல்லறிவுடன், சுதந்திரமான நல்வாழ்வு வாழ தனக்குவமையற்ற இறைவனின் தாள்பணிந்து புதுவருடத்தை எதிர்கொள்வோமாக.

அனைவரும் மண்ணில் நல்ல வண்ணம் வாழ இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றேன்.

சிவஸ்ரீ சோ.இ.பிரணதார்த்திஹரக் குருக்கள்,
ஸ்ரீபார்வதி பரமேஸ்வரன் ஆலயம்,
யாழ்ப்பாணம்.

## நிரந்தர சமாதானம் இப்புத்தாண்டில் மலர்ந்து சுபீட்சம் ஏற்படட்டும்



ஒவ்வொரு நாளும் வருகின்றது. போகின்றது. ஆனால் ஒரு சில தினங்கள் மட்டும் நம் வாழ்நாளில் மறக்கமுடியாத நாளாக, புனிதமான நாளாக, ஆரம்ப நாளாக, சுப தினமாக அமைகின்றன. இன்று பிறக்கும் இவ்வாண்டின் முதல்நாளும் (01.01.2009, வியாழக்கிழமை) ஆரம்ப நாளாகவும், புனிதமான நாளாகவும் நம் வாழ்வில் இணைந்துவிட்டது. வருடம் முழுவதும் நாட்டில், உலகில் நடைபெறுகின்ற நிகழ்வுகளையும், செய்திகளையும், அதிசயங்களையும் சாதாரண மக்கள் வரையும் எடுத்துச்செல்லும் பொது ஊடகங்களாக பத்திரிகைச் சாதனங்கள் தமது தர்மத்தைப் பேணி வருகின்றன.

அந்தவகையில் யாழ். மாவட்டத்தைப் பொறுத்தவரையில் "உதயன்" பத்திரிகையின் சேவையும், தேவையும், பத்திரிகைச் செல்வாக்கும், அங்கீகரிப்பும் குறிப்பிடத்தக்கதாகும். இப்புத்தாண்டு தினத்தில் அப் பத்திரிகையின் பல்வேறுபட்ட செயற்பாடுகளின் சிறப்பை பாராட்டாமல் இருக்கமுடியாது. அவை வரவேற்கத்தக்க விடயமாகும்.

மலரும் புத்தாண்டும் மேன்மேலும் இச் செயற்பாடுகளை மேம்படுத்தி, ஊடகசாதனங்கள் வாயிலாக இந்நாட்டில் நிரந்தர சமாதானம், சுதந்திரம், சாந்தி, சுபீட்சம், சகோரத்துவம், நடுநிலைமை என்பன ஏற்படுவதோடு உலகில் வாழும் அனைத்து ஜீவராசிகளுக்கும் நன்மை பயக்க வேண்டுமென இறைவனை வேண்டுவதோடு, இவ்வாண்டிலாவது மக்களுக்கு நிம்மதியான அமைதி வாழ்வு கிடைக்க வேண்டுமென ஆசிகள் கூறுகின்றேன்.

அனைவருக்கும் மங்களம் உண்டாகட்டும்.

பிரம்மஸ்ரீ ஜம்புகேஸ்வர மகேஸ்வர
சிவாச்சாரியார்,
சர்வதேச இந்துமத குருபீடாதிபதி.

## புத்தாண்டிலாவது நிரந்தர சமாதானம் கிடைக்கட்டும்



புத்தாண்டு ஒரு மனிதநேய விழா. இயற்கை மாறுவது கிடையாது; பண்டிகைகள் மாறுவது கிடையாது; கிழமைகள் மாறுவது கிடையாது. ஆனால் இன்றைய விஞ்ஞான உலகில் மனிதர்கள் மாறிவிட்டார்கள். சிறுவர்களுக்கு நல்ல வழிகாட்ட அவர்களை வழிநடத்த யாரும் இல்லை. தெய்வம்தான் வழிநடத்த வேண்டும். நல்ல உள்ளங்கள், நல்ல எண்ணங்களோடு வேண்டும்போது, இயற்கையும் கட்டுப்படும். ஆனால் அது மாறும்போது எல்லாமும் தலைகீழாகும். காட்டாறு, வெள்ளநீர், நிஷா என அழிவுகள் இப்போது ஏற்பட்டுள்ளன. உலகம் அனைத்தும் தீவிரவாதத்துக்கும், பொருளாதாரத்திற்கும் இப்போது காக்கையாய் கத்தவேண்டியுள்ளது. காக்காவாவது தன் இனத்தை அழைத்து உண்ண வைக்கிறது; செய்யவைக்கிறது; செயல்பட வைக்கிறது; செயல்படுகிறது. மனிதன் அதையும் செய்வதில்லை. தர்மம் மறக்கப்படுகிறது. தர்மம் எங்கு நிலைக்கிறதோ அங்கு இயற்கை இயல்பாகச் செயற்படுகின்றது. அதர்மம் எங்கு நிலைக்கிறதோ அங்கே பொறுமையாக தெய்வம் நின்று கொல்லும் என்று சொல்வார்கள்.

இன்று புத்தாண்டு. அடுத்த ஆண்டு வரைக்கும் நல்ல நேரம் உண்டு. நல்ல மழை உண்டு. நல்ல நீர் உண்டு. நல்ல வருமானம் உண்டு. நல்ல பொருளாதாரம் உண்டு.

ஒவ்வொரு புத்தாண்டு மலரும் பொழுதும் இவ்வாண்டிலாவது நிரந்தர சமாதானம் கிட்டவேண்டும் என்று அனைவரும் பிரார்த்தித்து அது எட்டாத கனியாக, பகற்கனவாக, முயற்கொம்பாக ஆகிவிட்டது. மலரப்போகும் புத்தாண்டிலாவது நிரந்தர சமாதானம் கிட்ட எல்லாம்வல்ல பரம்பொருளை இறைஞ்சி வேண்டி பிரார்த்தித்து அதர்மம் ஒழிந்து தர்மம் நிலைக்க இயற்கை சிறக்க எனது உள்ளார்ந்த புத்தாண்டு நல்வாழ்த்துக்களையும் நல் ஆசிகளையும்கூறி அமைகின்றேன்.

சிவஸ்ரீ சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் J.P.
பிரதமகுரு,
வல்வை ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்,
சிவாச்சாரிய பீடாதிபதி, அகில உலக சைவக்குருமார்
சம்மேளனம்.

## எல்லோரும் இன்புற்றுவாழ இந்நாளில் இறையருள் வேண்டித் துதிப்போம்



எல்லா மக்களும் இன்புற்றுவாழ இந்நாளில் பிரார்த்திப்போம். புதிய ஆண்டைப் புனிதமாக வரவேற்போம். நல்லனவே நடக்க வேண்டும் என்று எண்ணியவாறு எமது கடமையைத் தொடருவோம். கடந்த ஆண்டில் நாம்விட்ட தவறுகளை நினைந்து இறைவனிடம் மன்னிப்புக் கேட்போம். கிடைத்த நன்மைகளை நினைத்து நன்றி கூறுவோம். காலத்தின் பெறுமதியை உணர்ந்து, கணப்பொழுதும் நற்காரியங்கள் செய்யத் திட்டமிடுவோம். கடந்த ஆண்டில் நாம் நிறைவேற்றத் தவறியவைகளை நீளநினைந்து நிறைவேற்றத் தயாராவோம். எல்லோரையும் இன்முகத்தோடு மகிழ்விப்போம். நோயினால், இழப்பினால் வருந்துபவர்களுக்கு ஆறுதல் சொல்வோம். தவறுகள் செய்தவர்களையும் மன்னிப்போம். அரிய பிறவியின் பெருமையை உணர்வோம். நல்லன செய்பவரை நாடுவோம். நாளும் நன்றி மறவாதவர்களாக வாழவழி தேடுவோம். எம்மண்ணில் அமைதியும் சமாதானமும் ஏற்பட இமைப்பொழுதும் இறைவனை வேண்டுவோம். புதிய ஆண்டை எல்லோர் வாழ்விலும் புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்த வரவேற்போம். எல்லாம் வல்ல துர்க்காதேவியைப் பிரார்த்தித்து வாழ்த்தி வணங்கி நல்லாசிகளைச் சமர்ப்பிக்கிறேன்.

ஆறு.திருமுருகன்,
தலைவர்,
[illegible] தேவஸ்தானம்.

## யுத்தம் இன்றி மனித உரிமைகள் பேணப்பட்டு எல்லா மக்களும் சுபீட்ச வாழ்வு பெறவேண்டும்



புதிதாய் மலர்ந்த இவ் 2009 ஆம் ஆண்டிலே இறையாசீர் வேண்டி அனைவர்க்கும் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

சென்ற ஆண்டிலே நாட்டிலே பொருளாதார நெருக்கடிகள், இயற்கை அனர்தங்கள் போன்ற தடைகளை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இவற்றையும் விட வன்னிப் பிரதேசங்களைக் கைப்பற்ற அரசினால் மேற்கொள்ளப்படும் யுத்தத்தினால் உயர் இழப்பையும் ஆயிரக்கணக்கான மக்களின் இடப்பெயர்வுகளையும் சந்தித்தோம்.

வன்னிப் பிரதேசமும், குடாநாடும் விமானக்குண்டுத் தாக்குதலினாலும், அகோர எறிகணைகளின் சத்தத்தினாலும் அதிர்ந்தன. இக் கொடிய போரை நிறுத்தி அமைதியைக் கொண்டுவர பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கும் படியாகப் பிற நாடுகளிடமும், அயல் நாடான இந்தியாவிடமும் இருந்து குரல்கள் அரசாங்கத்திற்கு விடுக்கப்பட்டன.

இலங்கை ஜனாதிபதி எமது பரிசுத்த தந்தை 16 ஆவது பெனடிக்ற் அவர்களைச் சந்திக்கச் சென்ற போது போரை நிறுத்தும்படியாகவும், அமைதிக்காக உழைக்கவும் பரிசுத்த தந்தை வலியுறுத்தினார். ஆனால் போர் இன்னும் உக்கிரமடைந்து, இடம்பெயர்ந்த மக்களின் துன்பங்கள் இரட்டிப்பாகின.

நத்தார் காலத்தில் அமைதிக்கான போர் நிறுத்தங்கள் (செய்யும் படி) கடைப்பிடிக்க ஆயர்கள் விடுத்த வேண்டுகோளும் நிராகரிக்கப்பட்டது.

50 வருடங்களின் பின் கொட்டும் மழையால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு யாழ்.குடாநாட்டு மக்களை மேலும் வெகுவாகப் பாதித்தது.

முடிவில்லாத் துன்பங்கள் மத்தியில் மீண்டும் ஒரு புத்தாண்டு ஆரம்பிக்கும் இவ் வேளையில் அரசு வெற்றிக்களிப்பில் இவ்வாண்டை எதிர்கொள்ள விளையும் போது பல்லாயிரக்கணக்கான மனித உயிர்களின் அவலங்களைப் பற்றிக் கவலையில்லாமல் இருக்கவேமுடியாது. இந்நாட்டுத் தலைவர்களும், பிற நாட்டுத் தூதுவர்களும் சிறுபான்மையினரின் மட்டில் நடந்தேறும் அநீதிகளைக் கண்டித்து நிரந்தர அமைதிக்காக உழைக்கவும் அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நீதியான நிரந்தரத் தீர்வை எதிர்பார்க்கின்றோம்.

எல்லா மக்களும் யுத்தம் இன்றி மனித உரிமைகள் பேணப்பட்டு சுபீட்சமான வாழ்வு பெற எல்லாம் வல்ல இறைவனை வேண்டி அனைவர்க்கும் எனது இனிய புத்தாண்டு வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதி.வண.இ.தோமஸ் சவுந்தரநாயகம்,
யாழ்.ஆயர், ஆயர் இல்லம்.

## நீதியும் அமைதியும் நிலவிடவேண்டும்



எல்லா இறை மக்களும் நீதியுடனும் சமாதானத்துடனும் வாழ வேண்டுமென வாழ்த்துகிறேன். புதிய ஆண்டு புத்துணர்ச்சியையும் புதிய பலனையும் ஆன்மீக மறுமலர்ச்சியையும் உங்களுக்கு நல்குக.

இருபத்தோராம் நூற்றாண்டில் இன்னுமொரு புதிய ஆண்டிற் பிரவேசிக்கும் நாம் திடமனதுடனும் கடந்துபோன வரலாறு புகட்டும் பாடங்களை அறிந்து, புரிந்துகொண்டு செயற்படுவோம். இந்த நவீன உலகத்தில் கல்வி, தொழில்நுட்பம், பொருளாதாரம், சாஸ்திரம் போன்றவற்றை அபிவிருத்தி செய்யவேண்டுமென்று நாம் பல ஆக்கபூர்வமான திட்டங்களை புதிய ஆண்டில் வகுத்திருக்கலாம். அவையும் மிக அவசியம். ஆனால், அதேவேளையில் எங்கள் ஆன்மீக வளங்களையும் நாம் அபிவிருத்தி செய்யவேண்டும். அப்போதுதான் எந்த சூழ்நிலையிலும் நாம் யாவற்றையும் எதிர்கொள்ளலாம்.

இடமுறையில், தொழில் முறையில், சுகமுறையில், நில முறையில் நாம் ஒவ்வோர் நிலைமையைச் சந்தோஷத்தோடு அனுபவித்துக்கொண்டு இருக்கும்போது சடுதியாய் அழிவும் மாற்றங்களும் வரும். இதனாலேயே நாம் திகைப்படையலாம். ஆனால், இறைவனுக்கூடாகக் காரியங்களைப் பார்ப்பவர்கள் அமைதி உள்ளவர்களாக இருப்பார்கள்.

ஆன்மீக வளங்களை நாம் அபிவிருத்தி செய்யும்போது அவை நீதியும் சமாதானமும் நிலவிட வழிசெய்யும்.

இப்புத்தாண்டில் நீதியும், அமைதியும் நிலவிட வேண்டுமென்று நாம் அனைவரும் இறை நம்பிக்கையுடன் செயற்பட ஆண்டவன் துணைபுரிவாராக.

எஸ்.கே.கதிர்காமர்,
யாழ்.பிராந்திய குரு முதல்வர்,
இலங்கை மெதடிஸ்த திருச்சபை.

## சாந்தி, சமாதானம், சகோதரத்துவம் நிலவட்டும்



நாள்கள் நகர்கின்றன. வருடங்கள் விரைவாக மாறுகின்றன. எம் நாட்டு மக்களின் மனங்களில் நிறைந்து நிற்கும் நிம்மதியின்மை 'அச்ச உணர்வு' மூன்று தசாப்தங்களாக நீடிக்கும் யுத்த சூழ்நிலை இன்றும் மறையவில்லை. எட்டு என்ற இலக்கத்துடன் நிறைவு பெற்ற சென்ற வருடத்தில் நாட்டு மக்கள் அனைவரும் சொல்லணாத் துயரத்துடன் காலத்தை கழித்தார்கள்

இன்று ஆரம்பமாகும் புதுவருடத்தில் யுத்த சூழ்நிலை அகன்று மக்கள் அனைவரும் மன நின்மதியுடன் வாழ நாமனைவரும் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

எல்லா மக்களுக்கும் புதுவருட நல்லாசிகள் கிடைப்பதாகுக.

'லோகா சமஸ்தா சுகினோ பவந்து'
'இன்பமே சூழ்க எல்லோரும் வாழ்க'

ப.மனோகரக்குருக்கள்,
தலைவர்,சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் புதுவருடச் சிறப்பு மலர் - 2009

## இனியாகுதல் இன்பமாய்ப் பிறந்திடு புத்தாண்டே!

அமைதி யான வாழ்வை இழந்தோம்
அல்லல் ஒன்றே வாழ்வெனக் கண்டோம்
சுமைகள் எத்தனை சுமந்து சுமந்து
சொல்லொ னாத துன்பம் அடைந்தோம்
மமதை கொண்டு எம்மை வதைக்கும்
மாற்றான் கையில் அடிமை ஆனோம்
எமக்கு இனிய வாழ்வு கிடைக்க
இன்ப மாகப் பிறந்திடு புத்தாண்டே

– வ.யோகானந்தசிவம்.

## இன்பங்கள் சேர்த்திடவா இனிய ஆண்டே...!

எங்கள் துயர் துடைக்க
ஓடிவா புத்தாண்டே!
உறவுகளை ஒன்று சேர்க்க
ஓடிவா புத்தாண்டே!
பூமியிலே நாம் படும்
வேதனைகள் அகன்றோட
புதுப் பொலிவுடனே – புத்தாண்டே
விரைந்தோடிவா....
துன்பங்களைத் துடைத்திடவா புத்தாண்டே!
இன்பங்களைச் சேர்த்திடவா இனிய ஆண்டே....

-சாஜினி

## 2009 நீ வருகவே!

நீ வருகவே புத்தாண்டே!
ஓடி வருகவே புத்தாண்டே!
துன்பங் களைகவே புத்தாண்டே!
துயர்கள் மறைந்திட நீ வருகவே
பூமியில் உள்ள வேதனைகள் தீர
வாழ்வது சிறக்க வளமது கொளிக்க
அமைதியைக் கொண்டு வா புத்தாண்டே!

-வீணா


அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்
Niruthiga Jewellers
Genuine 22 Kt Jewellery Manufacturing Jewellers
நிருத்திகா ஜுவல்லர்ஸ்
177, Kasthuriar Road, Jaffna.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
அன்னை கோப்பி
அன்னை அரிசி மா
அன்னை அப்பம் மா
அன்னை பற்பொடி
அன்னை தோசை மா
அன்னை கறிமிளகாய்த் தூள்
குமரன் விபூதி
துர்க்கா பத்தி
சாரி சுகந்தா
ரோஸ் பத்தி
தேக ஆரோக்கியத்துக்குப் போசாக்கு நிறைந்த
ஜீவாகாரம்
அன்னா தொழிலகம் இணுவில்.
THANK YOU அன்னா தொழிலகம்

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்
இலங்கை வங்கியின் "பிரஸ்டிஜ் பிளஸ்" (Prestige Plus)
விஷேட நடைமுறைக்கணக்குகள்





இலங்கை வங்கியின் புதிய அறிமுகமான "பிரஸ்டிஜ் பிளஸ்" நடைமுறைக் கணக்குகள் பிரத்தியேகமான பல வசதிகளைக் கொண்டதாகும். இன்றைய உலகின் சுறுசுறுப்பு மிக்க உயர் நிர்வாகிகளுக்காகவும், துறைசார் வல்லுநர்களுக்காகவும் இக்கணக்கு வடிவமைக்கப்பட்டுள்ளது.

பிரத்தியேகமாக உங்களுக்கு

★ நீங்கள் ஒருதுறைசார் வல்லுனராகவோ, உத்தியோகத்தராகவோ அல்லது தனிப்பட்ட தொழில் முயற்சியில் ஈடுபடுபவராகவோ இருந்தால்

அல்லது

நீங்கள் ரூ.40,000/= க்கு மேல் ஊதியம் பெறும் ஓர் அரசாங்க உத்தியோகத்தராகவோ அல்லது அங்கீகாரம் வாய்ந்த ஒரு நிறுவனத்தின் உத்தியோகத்தவராகவோ இருந்தால்

மேற்படி கணக்கை நீங்கள் ஆரம்பிக்கத் தகுதியுடையவராக இருப்பதோடு இக்கணக்கு வழங்கும் கீழ்கண்ட விசேட சலுகைகளையும் பெற உரித்துடையவர்களாகிறீர்கள்.

★ உங்கள் பெயர் பொறிக்கப்பட்ட விசேட காசோலைப்புத்தகங்கள்.
★ 'இன்டர்நெட்' வங்கிச்சேவை மற்றும் குறுஞ்செய்தி அனுப்பும் வசதி.
★ விசா இலக்ட்ரோன் அட்டை மூலம் ஒரு நாளில் தன்னியக்க பணப்பரிமாற்ற யந்திரம் மூலம் ரூ.100, 000/= மீளப்பெறும் வசதி.
★ ஆரம்பக்கட்டணமின்றி ரூ.100,000/= தொகை கொண்ட விசா கடன் அட்டை பெறும் வசதி.
★ வழக்கமான ஆறு மாதகால அவகாசமின்றி புதிய வாடிக்கையாளர்களும் வீட்டுக்கடன்கள், தனிநபர் கடன்கள், குத்தகைக் கடன்கள் பெறும் வசதி.
★ செலிங்கோ இன்சுரன்ஸ் மூலமாக ரூ.5மில்லியன் ஆயுட்காப்புறுதி பெறும் வசதி.
★ இலங்கைவங்கி 'பிரயாணா இலாகா' மூலம் விசேட சலுகை விலைகளில் வெளிநாட்டு விமானச்சீட்டுகள் கொள்வனவு செய்யும் வசதி.

BANK OF CEYLON BOC
தேசத்தின் வங்கியாளர்

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்!
TVS
LANKA (Pvt.) Ltd.
அங்கீகாரம் பெற்ற யாழ். விற்பனை முகவர்
happy New Year!







யசோ மோட்டோர்ஸ்
163, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# உதயன் புதுவருடச் சிறப்பு மலர் - 2009

## அமைதியை மீட்டிட அருமையாய் நீ வா!

மழை மழை மழை இங்கே கொட்டியது நித்தம்
பளைக் கங்காலே தினம் பாரிய சத்தம்
விளை பயிர் வளருயிர் அழிந்ததே மிச்சம்
பழையன கழிந்து நாம் புதுமை கொள்வோம் சித்தம்

நீரினுள் இருந்தோம் குடி நீருக்காய் ஏங்கினோம்
நீரிதன் பெருமையை உணர்த்தினாள் எம்நிஷா
பாரினில் இயற்கையை பாழ்படுத்து வீரானால்
வேருடன் சாய்வீர் விளங்குவீரென்றாள் நிஷா

கத்தரி கிலோ இங்கே அறுநூறு ஆச்சு
கறி மிளகாயிங்கு அடியோடு போச்சு
பச்சை மிளகாயைப் பார்த் தேங்கலாச்சு
பாரிய மரங்களோ வேருடன் போச்சு

நீண்டபெரும் போரும் நிஷாவுடன் வெள்ளமும்
தாண்டவ மாடிய இரண்டாயிரத் தெட்டேபோய்
வேண்டிடும் அமைதியை விரும்பியவாறிங்கே
மீண்டிடச் செய்வாய் புத்தாண்டே வா.

கவிமணி அன்னைதாஸன்,
உரும்பிராய்.


KTV · TV · JAYA TV · VIJAY

எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புதுவருட நல்வாழ்த்துக்கள்

dishtv · BIGTV · TATA Sky

சிறப்பு தள்ளுபடி

SATS-TECH ENGINEERS
Dealers for Satellite Receiving Equipments and Cable Tv Accessories
No: 218 A/2, Wolfendhal Street , Colombo-13.
Phone:- 011 4562929 / 011 2424797

அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

happy NEW year!

ஏகாம்பரம்
புடைவை மாளிகை
மொத்த சில்லறை
விற்பனையாளர்கள்.
(72) 9, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் புதுவருடச் சிறப்பு மலர் - 2009

## தரணி எங்கும் விடியட்டும்

புதுப் பொலிவு கூட்டி
புதியதோர் ஆண்டாய்
பூமியிலே பிறந்துவிட்டாய் - நல்ல
புன் சிரிப்பாய் இருந்துவிடு

சோதனைகள் கடந்து நின்று
சத்தியத்தைப் பரப்பிவிடு
சாதனைகள் செய்து நின்று
சரித்திரத்தில் பதிந்துவிடு

கருணை காட்டி நின்றுவிடு
கரிசனையாய் இருந்துவிடு
கரிய இருள் நீங்கட்டும்
களைகள் எல்லாம் சாயட்டும்

காலமகள் உந்தனுக்கு
காவியமே படைத்திடுவேன்
காலனவனை விரட்டிவிடு
காலைப் பொழுதாகிவிடு

வேதியர்கள் கூடட்டும்
வாசமலர் தூவட்டும்
வேதனைகள் நீங்கட்டும்
வாழ்க என்று பாடட்டும்

தமிழர் தேசம் விடியட்டும் - போர்
தவிடு பொடியாகட்டும்
தடைகள் எல்லாம் நீங்கட்டும்
தரணி எங்கும் விடியட்டும்.

அ.சூரியன்
ஆனைக்கோட்டை.

## புத்தாண்டே நீ வருக!

வறுமைகளையும்
வெறுமைகளையும்
நித்தமும் எமக்களித்து....
வாழ்வதற்கே
வாய்ப்பளிக்காது
தென்றலும்....
திசைமாறி
வசைபாடிய
இரண்டாயிரத்தெட்டே!
நீ இன்றோடு
காற்றோடு கரைந்துவிடு
அதனோடு - எம்
அவலங்களையும்
கலந்து விடு....
புதிய வானில்...
உதயமாகும்
இரண்டாயிரத்தொன்பதே!
எங்களின்
இதயமெங்கும்
இங்கிதம்
இசைத்திட
எண்ணங்களில்
வண்ணங்களில்
வண்ணக்கோலங்கள்
தீட்டிடவே!
விரைந்து - நீ

எஸ்.கவிதரன்,
சண்டிலிப்பாய்.

## சுபீட்சம் அள்ளிவா....
## புத்தாண்டே

இத்தரையெங்கும்
இலௌகீகம்
நிலைத்திட
புத்தாண்டு
புலர்ந்தது
***
புதுவசந்தம்
தங்கிட
இனிய
சௌபாக்கியம்
அள்ளித் தந்தது
***
கலகங்கள்
அகன்று
அவலங்கள்
ஒழிந்திட
நல்வழியும்
பிறந்தது
***
சுபீட்சம்
நிறைந்திட
சுபமங்கலம்
இனிதாய்
நிறைந்தது
***
சமாதானம்
மலர்ந்திடும்
புத்தாண்டாக
புதிய
இரண்டாயிரத்தொன்பது
மண்ணில்
தடங்கள் பதிக்கட்டும்
***

க.நாகேஸ்வரா,
சண்டிலிப்பாய்.













உதயன் புதுவருடச் சிறப்பு மலர் - 2009

# இப்புத்தாண்டிலாவது தமிழினத்திற்கு பூரண சுதந்திரம் கிடைக்குமா?

இன்று புதியதோர் ஆண்டில் உலகு பிரவேசிக்கின்றது. இந் நாட்டு மக்களுக்கு மட்டுமன்றி உலகத்தின் சகல நாடுகளுக்கும் பொதுவான இப் புத்தாண்டு, இலங்கை வாழ் தமிழ் மக்களின் விடிவுக்கு ஒளி ஊட்டுவதாய் - வழி வகுப்பதாய் அமைய வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் தமிழ்மக்கள் அனைவரும் தாம் பின்பற்றும் - வணங்கும் தெய்வங்களை வேண்டி வழிபடுவதுடன் இப் புத்தாண்டை வரவேற்கின்றனர்.


கடந்த காலங்களின் இந் நாட்டின் தமிழ் பேசும் மக்கள் பட்ட துன்பங்கள், துயரங்கள், இடர்கள் எல்லாம் நீங்கி இப் புத்தாண்டிலாவது தமிழினம் பூரண சுதந்திரத்துடனும் தன்மானத்துடனும் தலை நிமிர்ந்து வாழ வழி செய்து தருமாறு நாம் அனைவரும் இன்றைய தினத்தில் நமது இஷ்ட தெய்வங்களை வேண்டி வழிபடுவோம்.

எமது மனங்களில் புதிய சிந்தனைகள் பிறக்கவேண்டுமாயின் நாம் அனைவரும் ஒன்றுபட்டு உண்மைக்காக விசுவாசத்துடன் உழைக்கவேண்டும். அன்பினால் இவ் உலகை ஆழலாமென எமது ஆன்றோர் பலர் தமது போதனைகள் மூலமும், வாழ்க்கை நடைமுறை மூலமும் எமக்கு உணர்த்தியுள்ளனர். அதுமட்டுமன்றி இந்து மதம் கிறிஸ்தவ மதம், இஸ்லாம் மதம் மற்றும் பௌத்த மதம் கூட 'தன்னைப்போல் பிறரையும் நேசி', 'பிற உயிர் வருந்தும் வேளை நீ வலிந்து சென்று உதவு, போன்ற கருத்துக்களை வலியுறுத்தும் வகையிலான கொள்கைகளின் அடிப்படையிலேயே இயங்கிவருகின்றன.

இன்றைய உலகு வேகமான இயக்கம் கொண்டது. உலகில் கணத்துக்குக் கணம் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்த வண்ணமுள்ளன. ஆயினும் மனிதன் - அவன் எந்த மதத்தைச் சாந்தவன் ஆயினும் - அவனது மனிதத் துவத்தை வெளிப்படுத்தும் விதத்தில் அவனது வாழ்க்கை, செயற்பாடுகள், நடைமுறைகள் அமையுமாயின் - தன்னல நோக்கின்றி அவனது சிந்தனையும் செயற்பாடுகளும் மனித சமுதாயத் துக்குப் பயன்பாடு உடையதாக அமை யுமாயின் அவன் வாழ்வில் வெற்றி பெற்றவனாக, சமுதாயத்துக்கு வழிகாட்டியாகத் திகழ இயலும்.

***

- எஸ்.ரீ.



## உறுதி தரும் புத்தாண்டு

புது வருடம் இனிமைமிகு புதுவருடம்
ஆண்டவன் ஈந்த அருள் வருடம்
ஆனந்தமாக எழுச்சியுடன் வரவேற்க
அனைவரும் ஒன்றாய் இணைந்திடுவோம்

புதுமைகள் புரிவோம் உலகினிலே
புது வருடம் தரும் அருளினிலே
அனைவரும் ஓரணியாய் சேர்ந்து இங்கே
புது உலகினைப் படைப்போம் பாரினிலே

மனிதரை மனிதர் நேசித்துமே
மனித மாண்பினை பூசித்துமே
இன, மத பூசல்கள் அகன்றிடவே
புது வருடத்தில் உறுதி கொண்டிடுவோம்.

- எஸ்.யேசுதாஸ்.

இந்த இனிய புத்தாண்டில் சாந்தியும், சமாதானமும் மலர எமது வாடிக்கையாளர்களுடன் இணைந்து புத்தாண்டை வரவேற்கின்றோம் வாழ்த்துகின்றோம்
Happy New Year
ஐங்கரன் மோட்டோர்ஸ்
யாழ்.வீதி, மானிப்பாய்.
தரம், நியாயம், மலிவு இதுவே எமது தாரக மந்திரம்
ஆட்டோ உதிரிப்பாகங்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்
Spare Parts For Motorbikes, Threewheelers, Bicycles, WaterPumps.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் புதுவருட வாழ்த்துக்கள்
நவநாகரிக நங்கையர் விரும்பும் ஆடைத் தெரிவுகளுக்கு நாடுங்கள்:
லைடன் புடைவை நிலையம்
குறிப்பு: அநேக வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க பொங்கல்வரை மலிவு விற்பனை நீடிக்கப்பட்டுள்ளது.
பஸ் நிலையம் முன்பாக, 410, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.222 2381.

PEOPLES AWARDS
1961-2008
47
மக்கள் வங்கியின்
புதுவருட வாழ்த்துக்கள்
மலரும் புத்தாண்டில்
குதூகலமும் பிரகாசமும் நிறைந்து விளங்க
அனைவரையும் வாழ்த்துகிறோம்



புது வருட தினத்தில் விசேட அன்பளிப்பொன்றை எதிர்பாருங்கள்
★ எமது பிள்ளைகளின் எதிர் காலததை வளமாக்கும் நோக்கில் "சிசு உதான" சேமிப்புக் கணக்கை எமது பிள்ளைகளுக்கு வழங்குகின்றது.
★ 5-18 வரை வயதுள்ள பிள்ளை களுக்கு ரூ.100/= இனை வைப்புச் செய்து "சிசு உதான" கணக்கை ஆரம்பிக்கலாம்.
★ பாடசாலைகளில் மக்கள் வங்கியின் "சிசு உதான" வங்கிப் பிரிவில் அல்லது வேண்டியதொரு மக்கள் வங்கிக் கிளையில் "சிசு உதான" கணக்கை ஆரம்பிக்கலாம்.
★ சேமிப்புத் தொகை அதிகரிப்புக்கேற்ப கவர்ச்சிகரமான பரிசுகள்.
PARINATHA Senior Citizens Account
PEOPLE'S BANK
People's Bank JanaJaya Save for progress

நண்பர்கள், அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
happy NEW year!
பார்வையில் பழுதுண்டா? பயம் எதற்கு? நீங்கள் பொங்கிடும் பார்வையைப் பெற்றிட, பற்களில் பழுதுண்டா? விழுந்துவிட்டனவா? முன்பைவிட உறுதியான, அழகான வெண்சங்குப் பற்களைக் கட்டிட - இளைய தலை முறைகளே! மிதப்புப் பற்களா? அழகிய அமைப்பைப் பெற்று உறுதிமிக்க பற்கிளிப்புகளைப் பொருத்திட
யாழ்ப்பாணத்தில் கைதேர்ந்த ஒரே ஸ்தாபனம்
எரிக்கணேஷ்
மூக்குக் கண்ணாடி அகமும் பல் கட்டுமிடமும
564, 566, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.: 2486
கிளைகள்: பழைய பொலிஸ் நிலையம் முன்பாக, இல.80, கே.கே.எஸ். வீதி, சுன்னாகம். இல.91, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தி, கொக்குவில்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
றேடியோ, கசெற்ஸ், மின்விசிறிகள், VCD, DVD Player, மின்சார வீட்டுப் பாவனைப் பொருள் மற்றும் இலத்திரனியல் உதிரிப் பாகங்களையும் பெற்றுக் கொள்ள விஜயம் செய்யுங்கள்
Happy New Year
திருத்திக்கொடுப்பதிலும் விசேஷமான நிறுவனம்
V.K. இராசரத்தினம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் புதுவருடச் சிறப்பு மலர் - 2009

## நிலையான சமாதானம் தந்திடுவாய் புத்தாண்டே!

ஓயாத போருக்குள்ளே
பிறக்கின்ற புத்தாண்டே
வருக! வருக!
வெடிகளைக் கொளுத்தி
உன்னை வரவேற்க
நாம் நினைத்திருந்தோம்
குண்டுகளின் ஓசைக்குள்ளும்
எறிகணை வெடிப்புக்குள்ளும்
அட்டகாசமாய் பிறக்கின்ற
புத்தாண்டே வருக! வருக!
பெரு வெள்ளப் பெருக்கோடு
கடந்த ஆண்டைப் பின்தள்ளி
நீ வரும் வேளை..............
புத்தாடை நாம் புனைந்து
பொலிவோடு வரவேற்க
எண்ணம் கொண்டிருந்தோம்
வன்னிமண் சுமந்து நிற்கும்
சோகங்களை நினைக்கையிலே
மனம் உடைந்து நிற்கின்றோம்
உறவுகளின் உயிரிழப்பும்
அலைவும் அகதி வாழ்வும்
இதயத்தை ரணமாக்க
இரத்தம் வடிக்கின்றோம்
இந்நிலையில் பிறக்கின்ற
புத்தாண்டே வருக! வருக!
மனிதக் கடத்தல்களும்
இரக்கமில்லாக் கொள்ளைகளும்
எம்மைப் பயமுறுத்த
தூக்கமில்லா இரவுகளில்
கண் விழித்துக் கலங்குகின்றோம்
அன்றாட வாழ்வின் சுமைகள்
தோள்களை அழுத்தி நிற்க
கேள்விக் குறியாய் நாம்
வளைந்து போனோம்
இந்நிலையில் பிறக்கின்ற
புத்தாண்டே வருக! வருக!!
வன்முறை களைந்து
சுதந்திரக் காற்றை
நாம் சுவாசிக்க
சொந்தமான எம் வீட்டில்
கால் பதித்து நாம் உறங்க
சுதந்திரத்தின் புத்தாண்டாய்
வந்திடுவாய்! வந்திடுவாய்!
யுத்தத்தின் சத்தம் ஓய்ந்து
மனித மாண்பில் மகிழ்ந்திருக்க
பிரிவுகளும் பிளவுகளும்
இல்லை என்றாக
இனபேதம் மறைந்து
சமத்துவமாய் நாம் வாழும்
ஆசிகளின் புத்தாண்டாய்
வந்திடுவாய்! வந்திடுவாய்!!
எம் மக்கள் ஆசிக்கின்ற
எல்லாம் கிடைக்கின்ற
இனிய ஆண்டாய்
வந்திடுவாய் வந்திடுவாய்
நீண்டகால எதிர்பார்ப்பாய்
எம்மண் விரும்புகின்ற
நிலையான சமாதானம்
தந்திடுவாய் புத்தாண்டே!

**இ.அ.அமலரட்ணம்,**
யாழ்ப்பாணம்.

## கடிகாரம் ஓட மறுக்கிறது - 2008 விடைபெறுகிறது

இன்னும் என்வீட்டுக் கடிகாரம் ஓடவில்லை,
அதை இயக்கும் பற்றறி என் கைக்கு அகப்படவில்லை.
ஒவ்வொரு முறையும் பழக்கப்பட்ட என் கண்கள், நேரம் பார்க்க
கடிகாரம் பார்த்து, ஏமார்ந்து திரும்புகின்றன.

96 இல் திரும்ப யாழ்.வந்த போது நின்றுவிட்டிருந்த கடிகாரம்
இன்றும் ஓட மறுக்கிறது
96 இல் காணப்பட்ட வீதித் தடைகள், சோதனைக் கெடுபிடிகள்,
பொருள்தட்டுப்பாடு,
மின்வெட்டு... அன்று ஆண்டு ஒன்று படித்துக் கொண்டிருந்தது என் பிள்ளை.

இன்று என் பிள்ளை ஆண்டு பன்னிரண்டு...
பன்னிரண்டு ஆண்டுகள் உருண்டோடிவிட்டதை உணர்ந்தேன்
மாற்றங்கள் பெரிதாக ஒன்றும் இல்லை!
வர வர இறுக்கம் கூட வீதி மூடல் உட்பட

அண்மையில் இரண்டு முறை இரண்டு நாடுகளுக்கு
கடமை நிமித்தம் ஒன்று சுற்றுலா நிமித்தம் மற்றொன்று
ஆகா என்ன சுதந்திரக்காற்று பயமற்ற சூழல்,
பார்க்க இரசிக்க எவ்வளவோ! பண்பு, ஒழுக்கம், மரியாதை

அங்கு, எங்கும் கடிகாரம் சரியாக ஓடுகிறது
எம் மண் கசக்க, அது இனிக்கிறது!
என் செய்வேன் எம் நிலை இன்னும் எவ்வளவு காலம்?
ஆம், 2008 ஆம் ஆண்டு விடைபெறக் கையசைக்கிறது.

என் பிள்ளை இன்னும் இக் கெடுபிடிக்குள் சிக்குண்டு
பயத்துடன் இதே சூழலில் வாழ வேண்டுமா?
கலங்குகிறேன், திகைக்கிறேன், யோசிக்கிறேன்,
விடை கிடைக்குமா?, என் கடிகாரம் ஓடுமா?

**நேசா**
சுண்டிக்குளி.
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் புதுவருடச் சிறப்பு மலர் - 2009

# மலரும் புத்தாண்டில் மனவுறுதி கொள்வோம்

இன்று புதியதோர் ஆண்டு பிறக்கின்றது. இருபத்தோராம் நூற்றாண்டின் முதல் எட்டு ஆண்டுகளும் நேற்றுடன் முடிவடைய, இன்று 2009ஆம் ஆண்டில் - புத்தாண்டில் உலகம் காலடி எடுத்து வைக்கின்றது. எமது இல்லத்தையும் அதையண்டிய சுற்றாடலையும் எவ்விதம் சுத்தம் செய்து தூய்மைப்படுத்துகிறோமோ, அதேபோன்று எமது உடலையும் உள்ளத்தையும் மட்டுமன்றி எமது எண்ணங்கள், சிந்தனைகளையும் சுத்தம் செய்துகொண்டு எதிர்கால வாழ்வு முன்னேற்றம் குறித்த எதிர்பார்ப்போடும் நம்பிக்கையோடும் புத்துணர்ச்சியோடும் இப்புதிய ஆண்டில் எமது வாழ்க்கைப் பயணத்தை ஆரம்பிக்கத் தயாராவோம்.

கழிந்துபோன ஆண்டுகளில் பெற்ற அனுபவங்கள் மற்றும் படிப்பினைகள் என்பவற்றை வழிகாட்டிகளாய்க் கொண்டு எதிர்கால வாழ்வில் எமது முயற்சிகள் சிறந்து நற்பலன் தரவேண்டுமென ஆண்டவனைப் பிரார்த்திப்போம்.

நமது இனம், மொழி, மதம் மற்றும் பாரம்பரியம் மிக்க தனித்துவமான கலாசாரம் என்பவற்றினின்றும் ஒரேயடியாக மாறிவிடுவதற்கு எம்மால் இயலாது. அது இலகுவானதொன்றுமல்ல: பாரம்பரியமிக்க பழக்கவழக்கங்களை - நடைமுறைகளை பொருத்தமான வகையில், பொருத்தமான சந்தர்ப்பங்களில் கடைப்பிடித்து ஒழுகுவதன் மூலமே இனத்தின் இருப்பை, தனித்துவத்தை நிலை நிறுத்திக்கொள்ள இயலும்.

'மாறுதல் இந்த ஜகத்தின் முதலாவது விதி' என்ற மகாகவி பாரதியாரின் கருத்து இன்றைய எமது சமுதாயத்தில், அரசியல், சமயம், மொழி, இலக்கியம் மற்றும் பழக்கவழக்கங்கள் ஆகிய பலதரப்பட்ட துறைகளில் ஏற்பட்டு வரும் மாறுதல்கள் மூலம் நிதர்சனமாகி வருவதை நாம் காண்கிறோம். அண்மைக்காலமாக இத்தகைய மாறுதல்களில் வேகம் மிகுந்து காணப்படுவதையும் எம்மால் அவதானிக்க முடிகிறது. பாரம்பரிய நடைமுறைகளைக் கைவிடாது தொடர்ந்து பேணிவரும் தன்மையும், புதியனவற்றை ஏற்பதில் துணிவின்மையும் எம்மத்தியில் குறிப்பிடத்தக்கதொரு அளவுக்கு விரவியுள்ளமை உண்மையேயாயினும், புதிய மாறுதல்கள் சமூகத்தின் பெருவரவேற்புக்கு உரியனவாக அமைந்துள்ளமையையும் எம்மால் அவதானிக்க முடிகிறது.

தமிழ்கூறு நல்லுலகினைப் பொறுத்தவரை புதியன பல நம்மிடையே புகுந்ததற்கு மேலைநாட்டுத் தொடர்புகளே காரணமாயின. சமுதாயம், அரசியல், சமயம்,மொழி,கலை மற்றும் இலக்கியம் ஆகிய துறைகளில் தனித்துவத்துடன் கூடிய கலாசார விழுமியங்களைக் கொண்டியங்கிய எமது தமிழினம், மேலைநாட்டுத் தொடர்புகள் காரணமாக அந்நாட்டு நடைமுறைகளைக் கைக்கொள்ள ஆரம்பித்தது. அந்தவகையில் அமைந்ததே இன்று எம்மால் கொண்டாடப்படும் இப்புத்தாண்டுக் கொண்டாட்டமாகும்.

ஒவ்வொரு ஆண்டின் முதல் தினத்திலும், ஜனவரி முதலாம் நாளை கத்தோலிக்கத் திருச்சபை உலக சமாதான தினமாகப் பிரகடனப்படுத்திக் கொண்டாடி வருகின்றது. அந்தவகையில் திருத்தந்தை பாப்பரசர் ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி முதலாம் திகதியன்று உலக மக்களுக்குச் சமாதானச் செய்தியை வெளியிட்டு வாழ்த்துவதோடு உலகில் சாந்தியும் சமாதானமும் நிலைக்க வேண்டுமென ஆண்டவரை வேண்டி ஜெபம் செய்யுமாறு கேட்டுக்கொள்வதும் வழக்கமாகும். இச்சமாதானச் செய்தியில் மன்னிப்பு மற்றும் நீதி என்ற இரு விடயங்களுக்கும் திருத்தந்தை பாப்பரசர் முக்கியத்துவம் கொடுப்பது வழக்கமாகும். நீதிக்கு மதிப்பளிப்பதும், மன்னிக்கும் மனப்பாங்கும் அவசியமான அம்சங்களாய் அமைகின்றன என அவர் தமது முன்னைய வழமையான புத்தாண்டுதின நற்செய்தியில் உலக மாந்தர்களுக்கு வற்புறுத்தி வந்துள்ளார்.

இந்நாட்டில் வாழும் சிங்கள தமிழ் மற்றும் முஸ்லிம் ஆகிய இனரீதியான, இந்துக்கள், கிறிஸ்தவர்கள், பௌத்தர்கள், இஸ்லாமியர்கள் என்ற சமய ரீதியிலான பல்லின மக்கள் இவ்வித தம் இனம் சார்ந்த மற்றும் மதம் சார்ந்த வேறுபாடுகள் எவையுமின்றி எல்லோரும் ஒருங்கிணைந்து கொண்டாடும் ஒரு கொண்டாட்டமே இப்புத்தாண்டு தினக் கொண்டாட்டம் என்பதால் இது தனிச்சிறப்புப் பெறுகிறது.

அந்தவகையில் தத்தமது இனமத ரீதியிலான அடையாளங்களை வெளிப்படுத்தும் வகையில் புத்தாண்டின் ஆரம்பநாளான இன்று இந்துக்கள் தமது கோவில்களிலும் கிறிஸ்தவர்கள் தேவாலயங்களிலும் பௌத்தர்கள் விகாரைகளிலும் இஸ்லாமியர்கள் மசூதிகளிலும் தத்தமது பாரம்பரிய பண்பாடுகளுக் குமைந்த தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவதன் மூலம் தெய்வ அனுக்கிரகம் வேண்டித் துதிப்பது வழக்கமாகும்.

அந்த வகையில் நாமனைவரும் இனங்களுக்கிடையேயான கடந்தகால கசப்புணர்வுகள், நம்பிக்கையீனம் மற்றும் பகைமை என்பவற்றை மறந்து சகல இனங்களும் சகல மொழி பேசுவோரும் மற்றும் சகல மதங்களைப் பின்பற்றுவோரும் எந்தவித பாரபட்சமுமின்றி இந்நாட்டில் அமைதியுடனும் மனமகிழ்வுடனும் வாழத்தக்க வகையில் தனிமனித உரிமைகளும் சுதந்திரமும் உறுதிப்படுத்தப்படல் அத்தியாவசியமாகும்.

பல ஆண்டுகளாக இந்நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் யுத்தத்தின் பாதிப்பினால் இனமத வேறுபாடின்றி இந்நாட்டின் சகல பிரஜைகளும் ஏதோ ஒருவகையில் சொந்த வாழ்க்கையில் சிரமங்களை எதிர்கொள்ள நேரிட்டுள்ளது. இந்நாட்டின் தமிழ் மக்களது எதிர்பார்ப்புகளுக்கு ஏற்றவகையிலான எவ்வித அரசியல் நிலை முன்னேற்றமும் இதுவரை ஏற்பட்டதாகக் கருதமுடியவில்லை. ஒவ்வொரு ஆண்டின் ஆரம்பத்திலும் இவ்வாண்டிலாவது எமது நீண்டநாள் இன்னல்கள் மற்றும் சிரமங்கள் நீங்கி, சுபீட்சம் கிட்டுமென்று பெரும் எதிர்பார்ப்புகளுடன் புத்தாண்டை எதிர்கொள்ளும் இந்நாட்டின் தமிழ்பேசும் மக்களது மனதில் இன்றைய புத்தாண்டு தினம் குதூகலத்தை ஏற்படுத்துவதாக அமையவில்லை. இனவாத மற்றும் சுயலாப நோக்குகளுடனான அரசியல் நிலைப்பாடுகள் காரணமாக, நாட்டில் நியாயமான சுதந்திரம் மற்றும் உரிமைகள் என்பவை உறுதிப்படுத்தப்படுமா என்ற சந்தேகமும், பொதுமக்களது சாதாரண வாழ்க்கைப் பிரச்சினைகள், இயல்பு வாழ்க்கை என்பன போன்ற பிரச்சினை களுக்குத் தீர்வு ஏற்படுமா? என்ற சந்தேகமும் சேர்ந்து தமிழ் மக்களது மனங்களைத் தளர்வுறச் செய்யும் நிலையிலேயே இப்புத்தாண்டு மலர்ந்துள்ளது.

பொதுவாகவே, இந்நாட்டின் தமிழ்பேசும் மக்கள் கடின உழைப்புக்கும் மனத்திடத்துக்கும் சகிப்புத் தன்மைக்கும் பெயர்பெற்றவர்களாவர். எத்துணை இடர்வரினும், உறுதிப்பற்றுடன் உண்மையாய் உழைக்கத் தக்கவர்களாவர். கடந்தகால இன்னல்களையும் துயரங்களையும் இழப்புக்களையும் மனவைராக்கியத்துடன் எதிர்கொண்டமை போன்று, சுதந்திரமான சமத்துவமான வாழ்க்கைக்காக எத்தனை துன்பங்கள், சவால்கள் எதிர்ப்பட்டபோதிலும் அவற்றை எதிர்கொள்ளத்தக்க மனவுறுதிகொண்டவர்களாவர். மனிதகுலம் துயரங்களுக்கும் துன்பங்களுக்கும் உட்படும் வேளைகளிலெல்லாம் அவர்களுக்கு இறையருள் துணைநின்று அவர்களது இன்னல்களைப் போக்கியமைக்கு வரலாற்றில் பல உதாரணங்கள் உள்ளன. அவர்களது சமய நம்பிக்கைகளின்படி தாம் நம்பித் துதிக்கும் தெய்வங்கள் அவர்களுக்கு நலன் செய்ததாக வரலாற்றுக் கதைகளுண்டு. அந்த வகையில் துன்பங்களுக்கு விடிவு வேண்டி நிற்கும், இந்நாட்டின் தமிழ் மக்களுக்கு அவர்களது எதிர்பார்ப்புக்கள் நிறைவேறி அவர்களது சொந்த வாழ்க்கையில் சுபீட்சமும் நன்மைகளும் கிட்டவும், தமிழ் மக்கள் பூரண சுதந்திரத்துடன் தலைநிமிர்ந்து வாழத்தக்க வகையிலான அரசியல் சுபீட்சம் கிட்டவும் இறையருள் துணைநிற்க வேண்டுமெனப் பிரார்த்திப்போம்.

- பொன்வேளன்.


தரமான பொருள்களை ஒரே கூரையின் கீழ் பெற்றுக்கொள்வதற்கு சகல வசதிகளுடன் யாழ் நகர மக்களின் உன்னத பணியில்



JAFFNA MULTI PURPOSE CO - OPERATIVE SOCIETY (LTD)
Co-op City I
127, K.K.S Road, Jaffna
கூட்டுறவு நகர்
127, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

புதுவருட வாழ்த்துக்கள்

வாழ்த்துவோர்: தலைவர், பொதுமுகாமையாளர், பணிப்பாளர்கள், பணியாளர்கள்.

சுத்தமாகப் பொதி செய்யப்பட்ட மளிகைப் பொருள்கள்,
குழந்தைகளுக்கான பால் மா வகைகள்,
கேக் வகைகள் , ஐஸ்கிறீம் வகைகள்
குளிர்பானங்கள் , பழரசங்கள்,பிஸ்கற் வகைகள்,
அழகுசாதன வாசனைப் பொருள்கள்,
அன்பளிப்புப்பொருள்கள், பாடசாலைப் பொருள்கள் எழுதுகருவிகள், போன்ற பல வகையான பொருள்களை
நியாயமான விலையில் சுயமாக தெரிவுசெய்யலாம்.

JAFFNA MULTI PURPOSE CO - OPERATIVE SOCIETY (LTD)
Co-op City II
Main Street, Jaffna
கூட்டுறவு நகர்
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

கூட்டுறவு நடமாடும் வாதி செய்
விற்பனை நிலையம்

அரச திணைக்களங்களின் அமோக ஆதரவைப் பெற்று தனது விற்பனை விநியோக சேவையில் புதிய பரிமாணமொன்றை வகுத்து வெற்றி நடைபோட்டு வருகின்றது

நடமாடும் சேவையுடன் மற்றுமொரு சேவையாக எமது சங்க எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களில் வசிக்கும் மக்களின் சுக துக்க நிகழ்வுகளில் பங்கெடுக்கும் முகமாக அவர்களுக்குத் தேவையான நுகர்வுப் பொருள்களை அவர்களின் வீட்டிற்கே கொண்டு சென்று வழங்கும் நடவடிக்கையை ஆரம்பித்துள்ளோம் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

யாழ்ப்பாணம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் – வடது
Happy New Year
127 , கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் புதுவருடச் சிறப்பு மலர் - 2009

## விடிவை எமக்குத் தந்துவிடு; இன்றே அமைதியை அளித்துவிடு

ஆண்டவர் தம் திருமுகத்தைத் திருப்பிடுவாரோ
ஆண்டுக் கணக்காய் எங்கும் அமைதி தந்திடுவாரோ
நீண்டு செல்கின்றதே எம் எதிர்பார்ப்புகள் இங்கு
உண்டு அமைதி என்ற உண்மை கூறாயோ

ஆளும் அரசுகள் நீதியில் நின்றிட
சூழும் பகைமைகள் தீயினில் கனன்றிட
வாளும் போரும் வாழ்வினில் தகன்றிட
வாழும் உயிர்களின் வசந்தம் தோன்றிட

கடின உழைப்பு எம்மில் உதித்திட
கடின மனங்கள் கனியாய்க் கனிந்திட
மிடிமை நிலைகள் அடியோடு சாய்ந்திட
படியேறி நாமும் பாரில் உயர்ந்திட

வாழ்வினைச் சிதைக்கும் வன்போர் ஒழிந்திட
சூழ்வினை கொள்கைகள் அகற்றிடுவோம்
வளத்தினைப் புதைக்கும் வன்முறை அழித்து
வளர்த்திடும் பொருளாதாரம் போற்றிடுவோம்

புத்தம் போற்றிடும் புண்ணியவான்கள்
நித்தம் பேசிடும் அநீதிகள் அகற்றிடாரோ
யுத்தம் ஏற்றிடும் காப்பாளர்கள்
நிசப்த அமைதி காத்திடாரோ

பிசாசுக் கொடுமை கொண்ட போர்க் கூச்சலும்
நிஷாவின் கொள்கை கொண்ட இயற்கை சீற்றமும்
உசாவிட வேண்டாம் எம் தாய் மண்ணில்
விசா எடுத்தே சென்றுவிடு விடிவை எமக்குத் தந்துவிடு

மலர்ந்துள்ள புதிய ஆண்டே
மகிழ்வை எமக்குத் தந்துவிடு
உலர்ந்துள்ள மனித வாழ்வில்
உண்மையை நீ வாழ விடு

இன்னல்களால் இழைத்துவிட்ட
வன்னி மக்கள் வாழ்வுகளில்
இனியும் வேதனைகள் வேண்டாம்
இன்றே அமைதியைத் அளித்துவிடு

இறைவா இனியும் தாமதம் வேண்டாம்
இறுமாப்புக் கொண்டோர் இன்றே மாறி (டட்டும்) டவே
இலங்கையில் அமைதியை முழங்கி (டட்டும்) டவே
இனிய உம் திருமுகம் திருப்பி இரக்கம் எமக்குக் காட்டிடாயோ

- திராட்சையநான்.

## மகத்தான மாற்றமாய் மலர்க புத்தாண்டே!

இரண்டாயிரத்து எட்டு உலர்ந்து
இரண்டாயிரத்து ஒன்பது மலர்ந்து
இறையாசீர் கொண்டு மிளிரும்
இனிய புத்தாண்டே வருக வருக

பழையன கழிதல் புதியன புகுதல்
நிலைத்துவிட்ட தமிழ் பாரம்பரியத்தில்
பழைமையான பகைமைகள் நீங்கிடாதோ
புதுமையான பண்புகள் தோன்றிடாதோ

ஆண்டொன்று கடந்திட
வயதொன்று கூடுகின்றதே
ஆண்டுக் கணக்காய் எங்கும்
வசந்த வாழ்வொன்று கை கூடாதோ

புன்முறுவல் பூக்கும் சிறார்கள்
வன்முறுகலால் உதிர்ந்திடுவாரோ
தொன்முறை கொள்கைகள் களைந்து
நன்முறை கொள்கைகள் விதைப்பாரோ

இகத்தின் சக்தி இளையோர் என்று
அகத்தில் உண்மை புலராதோ
யுகத்தில் மாற்றம் காணும்
மகத்தான மாண்புகள் மலராதோ

பெரியோரை மதிக்கும் மேன்மை ஓங்கட்டும்
உரிமைகள் காக்கும் வாண்மை நிலைக்கட்டும்
பரிதாப வாழ்வுகள் மனிதத்தில் நீங்கட்டும்
சரி நீதி சமத்துவம் மண்ணில் தழைக்கட்டும்

மனிதத்தை மாண்புடன் வளர்க்க
இனிதாக மலர்ந்துள்ள புத்தாண்டே
மகத்தான மாற்றங்கள் உன்னில் ஏற்று
வியத்தகு வீரனாய் விரைக புத்தாண்டே

- இ.வில்சன் (இளவாலை).



அனைவருக்கும் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்
பலசரக்கு மற்றும் மிக்சர் தயாரிக்கும்
பொருள்கள் மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெறுவதற்கு நாடவேண்டிய ஒரே இடம்
ஜெகன் களஞ்சியம்
இல.475, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம் இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்
சீமாட்டி புடைவைக்கடல்
122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
சுபமுகூர்த்தப்பட்டுப் புடைவைகளா? பட்டு வேட்டிகளா? அல்லது நீங்கள் விரும்பும் எவை புடைவை வகைகளா? எது வேண்டுமோ அனைத்தையும் உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்திட நாடுங்கள்
மங்கை சில்க்ஸ்
15, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்
★ சகல விதமான கேக், ஐஸ்கிறீம், குளிர்பானங்களைத் தயாரிப்பதற்கான பொருள்கள் ★ கைத்தொழில் மூலப்பொருள்கள் ★ வாசனைத் திரவியங்கள் ★ மற்றும் ஆயுர்வேத மருந்துச் சரக்குகள் அனைத்தையும் பெற்றிட
ஸ்ரீ காந் ஏஜென்ஸ் அன் குறோசரீஸ்
161A, கே.கே.எஸ். வீதி (சத்திரத்துச் சந்தி), யாழ்ப்பாணம். T.P: 2219

அனைவருக்கும் எமது புதுவருட நல்வாழ்த்துக்கள்
ஸ்ரார் செலூலர் அன் மல்ரி சொப்
G.S.M மேசைத் தொலைபேசிகள், கையடக்கத் தொலைபேசிகள்/உதிரிப்பாகங்கள், Kit காட், More காட், Sim காட் என்பவற்றைக் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.
HAND PHONE UNLOCK செய்துதரப்படும், அத்துடன் சிறந்த முறையில் பழுதும் பார்க்கப்படும்
• குறைந்த கட்டணத்தில் தொலைபேசி அழைப்புக்களையும் பெற்றுக் கொள்ளலாம்.
இல.16, பஸ் நிலையம், (இ.போ.ச - இல.788, பஸ்தரிப்பிடம் முன்பாக) யாழ்ப்பாணம்.
T.P -077 6660289, 071 6169327.
HAPPY NEW YEAR

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்
நேர்மை, நம்பிக்கை, நாணயம் மிக்க ஸ்தாபனம்
ஸ்ரீ நகை அகம்
இல.392, கண்டி வீதி, யாழ்ப்பாணம்

அனைவருக்கும் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்
D.G. Brasserie
D.G. BRASSERIE
Bra
ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
* திருமணப் பட்டுப்புடவைகளுக்கும்
* நவீன ரக ஆடைத் தெரிவுகளுக்கும்
* சிறுவர், சிறுமியர்களுக்கான சிறந்த ரெடிமேட் ஆடைகளுக்கும்
ஞானம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ் ரெடிமேட் உலகம்
18A, நவீன சந்தை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

நண்பர்கள், அன்பர்கள், அனைவருக்கும் எமது புதுவருட நல்வாழ்த்துக்கள்
*உங்களுக்கு வேண்டிய அழகிய அசல் தங்க நகைகளை விருப்பத்திற்கேற்ற டிசைன்களில் வடிவமைத்துத் தருபவர்கள்.
*ஓடர் நகைகள் உடனுக்குடன் உத்தரவாதத்துடன் செய்து கொடுக்கப்படும்.
Happy New Year
Happy New Year
தாக்ஷா நகைப்பூங்கா
71, கன்னாதிட்டி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் புதுவருடச் சிறப்பு மலர் - 2009

## பகைமையை விலக்கி ஒன்றிணைந்து சமாதானத்தைப் பெற்றுக்கொள்வோம்

பல்வேறு இன்ப, துன்ப நிகழ்வுகளுக்கு முகம் கொடுத்து ஒரு வருடத்தை நிறைவு செய்து கொண்டு இன்னோர் புதுவருடத்தில் இன்று நாம் காலடி எடுத்து வைக்கின்றோம். முடிந்த வருடத்தில் எமது வாழ்வியலுக்குத் தடையாகவும், முட்டுக்கட்டையாகவும் இருந்தவற்றைத் தெளிவாக இனங்கண்டு புதிய வருடத்தில் அவற்றுக்கு முகங்கொடுத்து முன்னேறுவது எவ்வாறு என்பதை நாம் அனைவரும் புரிந்து கொண்டுள்ளோம்.

கடந்த இரு தசாப்தங்களுக்கு மேலாக தொடர்ந்து வந்த யுத்தத்துக்கு முடிவு கட்டி அமைதிப் பேச்சு வழியில் எமது பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து அதன் மூலம் நிரந்தரத் தீர்வொன்றினை எட்டுவதற்குத் தமிழர்களாகிய நாம் மேற்கொண்டுவந்த கடும் முயற்சிகள் எண்ணிலடங்காதவை.

நீண்ட காலமாகத் தொடரும் இனப்பிரச்சினைக்கு முடிவை எட்டுவதற்காகத் தமிழர் தரப்பு பல விட்டுக் கொடுப்புகளுடனும் பொறுமையுடனும் நடந்து கொண்டிருந்தது. இப்போது பிறந்துள்ள புதுவருடத்திலும் அந்த முயற்சிகளைத் தொடர்வதற்குத் தமிழினம் தயாராகவே உள்ளது.

ஆயினும், தமிழர் தரப்பின் நியாயப்பாட்டைச் சரியாகப் புரிந்து கொள்ளமுடியாத அரசியல் தலைமைகளின் அநாகரிகமான செயற்பாடுகளினால் மீண்டும் போர்ச்சூழல் ஒன்றின் மத்தியில் தமிழ் மக்கள் இந்த வருடப் பிறப்பைக் கொண்டாடுகிறார்கள் என்பது அனைவரும் அறிந்ததே.

நிரந்தரத் தீர்வுமின்றி நிம்மதியான வாழ்வுமின்றி சொந்த இல்லிடங்களை விட்டு இடம்பெயர்ந்த நிலையில் தொடர்ந்து ஓர் அரசியல் வெறுமைக்குள் தமிழ்மக்கள் சிறைப் பட்டுக் கிடக்க விரும்பவில்லை.

தடைப்பட்டுப் போயுள்ள சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாவதென்பது மிகவும் கடினமான விடயமாகவே இப்போது காணப்படுகின்றது. மீண்டும் யுத்தம் தீவிர நிலை கண்டுள்ளது.

இந்நிலையில்தான் புதியதோர் வருடம் பிறந்துள்ளது. இப்புத்தாண்டில் தமிழர் தரப்புப் பிரச்சினைகள் எவ்வாறு அணுகப்படப் போகின்றன என்பதுதான் அனைவரதும் எதிர்பார்ப்பு.

இந்தக் கட்டத்தில் அனைவரும் ஒன்றிணைந்து சமாதானத்தை நோக்கித் திடமான மனதுடன் முன்னேற வேண்டிய காலம் கனிந்துள்ளது.

எனினும், இன, மத, மொழி, கலாசாரம் போன்றவை பல சமயங்களில் இப்பயணத்துக்கு முட்டுக்கட்டையாக அமைந்து விடுகின்றன.

எமது துன்பங்களையும் நீண்டகால அனுபவங்களையும் மறந்து ஒன்றிணைந்து செயற்படுவதென்பது இலகுவான விடயம் அல்ல.

பல்வேறு அம்சங்கள் எமது சமாதானப் பயணத்துக்குத் துணையாக அமையலாம். இவற்றில் முக்கியமான இடத்தை வகிப்பது மன்னிப்பு. மன்னிக்கும் மனப்பாங்கு எமது உள்ளங்களில் குடிகொள்ளாவிட்டால் நாம் சமாதானப் பயணத்தில் முன்னேற முடியாதென்பது மறுக்க முடியாத உண்மை.

எமது வரலாற்றில் நடந்த பல்வேறு துன்ப நிகழ்வுகளிலிருந்து வரும் தாக்கங்கள் எம்மைவிட்டு இன்றும் அகலவில்லை. அவை நம்பிக்கையீனம், பயம் போன்றவற்றுக்குத் தொடர்ந்தும் தூபமிட்டுக் கொண்டே உள்ளன.

இவ்வரலாற்று நிகழ்வுகளுக்கும் அவற்றால் ஏற்படும் தாக்கங்களுக்கும் நாம் அடிமைகளாக இருக்காது விடுதலை அடைய வேண்டும். உயிர்கொல்லியாக எம்மிடையே பரவியுள்ள பழிக்குப் பழிவாங்கும் உணர்வுக்குப் பதிலாக மன்னிப்பில் அரும்பும் புதிய சுதந்திரம் எம்மை ஆட்கொள்ள வேண்டும்.

அரசுகளும் அமைப்புக்களும் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான பலமான அமைப்புகளாக உருவாக வேண்டும்.

பல்வேறு நம்பிக்கையீனங்களுக்கு மத்தியில் ஒவ்வொருவரினதும் சுதந்திரத்தையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதாக இவை அமைய வேண்டும்.

மன்னிப்பு என்பது இலகுவானதல்ல. இயற்கைக்கு மாறானதாகவும் அது தோன்றலாம். உள்ளத்தின் ஆழத்திலிருந்து ஒருவரை மன்னிப்பது என்பது மிகப்பெரிய சாதனையே. மன்னிப்பின் மூலம் நாம் சாதிக்க நினைக்கும் எந்தக் காரியத்தையும் இலகுவில் சாதித்து விட முடியும். அந்தச் சக்தி மன்னிப்பிற்கு உள்ளது.

எனவே, கடந்தகால கசப்பான அனுபவங்களை அடியோடு மறந்து ஒரு புதிய பாதையில் புதுமையான சமூகமாக ஒன்று திரள்வதன் மூலம் நாம் எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும். அதற்காக நாம் அனைவரும் அர்ப்பணிப்புடனும், பொறுமையுடனும் செயலாற்ற வேண்டியவர்களாக மாற வேண்டும்.

நீண்டகாலமாகத் தொடரும் யுத்தத்தை நிறுத்தித் தடைப்பட்டுள்ள சமாதான நடவடிக்கைகளுக்குப் புத்துயிர் ஊட்டி அதன்மூலம் நீண்ட காலப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வினை எட்டுவதற்குப் பிறந்திருக்கும் புத்தாண்டு ஒரு சமாதான ஆண்டாக அமைய வேண்டியது அவசியமாகும்.

ஐக்கிய இலங்கைக்குள் சகல இனங்களும் தமக்கேயுரிய உரிமைகளுடன் சுதந்திரமாகவும் சமத்துவத்துடனும் வாழ்வதற்கான சூழல் விரைவில் தோன்றி யுத்தமற்ற நாடாக எமது நாடு மாற புதுவருடம் வழி சமைக்கட்டும். அதற்காக நாம் அனைவரும் சாதி, மத, பேதங்களை மறந்து ஒன்றிணைவோம்.

பிறந்திருக்கும் புத்தாண்டில் அனைவருக்கும் சாந்தியும், சமாதானமும், அன்பும் கிடைப்பதாக!

அதிரன்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் புதுவருடச் சிறப்பு மலர் - 2009

## வருக நீ புத்தாண்டே!

வருக நீ புத்தாண்டே,
வருக வருகவே!
தருக நற்பலன்களை
தரணி ஓங்கவே!

அன்பு ஓங்கவே
அகிம்சை ஓங்கவே
துன்பம் நீங்கியே
தூய்மை பெருகவே வருக......

அறிவு ஓங்குக,
ஆற்றல் ஓங்குக,
அகிலம் எங்கினும்
அதர்மம் நீங்கவே வருக.....

போரைச் சாய்த்திடு
பொய்மை நீக்கிடு
உய்யும் வழிகளை
உணரச் செய்திட வருக.......

பொறுமை நிலைத்திட
புனிதம் போற்றுவோம்
வறுமை நீங்கிட
வளங்கள் பெருகவே வருக......

நட்பை நாடுவோம்
நன்மை செய்குவோம்
கற்பு வாழ்கவே - என்று
கவிதை பாடுவோம் வருக......

- சிபெரு -

## சீருடன் பிறந்திடு புத்தாண்டே!

நித்திய கல்யாணி மலரினைப் போன்று
நித்தமும் கதிரவன் மலர்ந்தொளி பகரும்
எத்தனை வீதிகள் மூடிய விதிதனை
எம்விழி பார்க்கும் ஏக்கமும் பெருகும்
நித்தமும் எழுதலாய் ஆண்டொன்று மறைந்தது
நயமிலா பேச்சும் நத்தை போலானது
சித்திகள் செப்பமாய் தருகின்ற புத்தாண்டே
சரித்திரம் படைத்திட சீருடன் பிறந்திடு.

-அல்வையூர் கே.ஆர்.திருத்துவராஜா.


கர்த்தரே தெய்வம்
துன்பங்கள் நீங்கி, இன்பமாக
வாழ எமது இனிய
புதுவருட வாழ்த்துக்கள்

மேசியா நகைமாடம்
தங்கநகை
வியாபாரம்
237, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

மேசியா அழகு மாடம்
அழகு சாதனம், அன்பளிப்புப் பொருள்கள்
விற்பனையாளர்.
பருத்தித்துறை வீதி, கோப்பாய் தெற்கு.

Happy New Year
அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்களுக்கு
எமது புதுவருட வாழ்த்துக்கள்
எந்நாளும் எப்போதும் எந்நேரமும்
எழிலும் உறுதியும் நிறைந்த
துணிபாடங்களுக்கு இன்றே விரையுங்கள்...
திரேசா
துணிபாட மாளிகை
137, 139, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 7941.

இனிய புத்தாண்டு நன்னாளில் எங்கள் வாடிக்கையாளர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றோம்

தங்கம் உள்ளே
பணம் வெளியே





அதிகூடிய முற்பணம் குறைந்த வட்டி

தங்கத்தின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது.
உடனடியாகவே அதன் நன்மையை நாம் உங்களுக்கு வழங்குகின்றோம்.

தங்கப்பவுணுக்கான முற்பணம்
24 கரட் தங்கத்துக்கு ரூ. 18,250/-
22 கரட் தங்கத்துக்கு ரூ. 16,600/-

வரிசை இல்லை. முத்திரை வரி இல்லை. ஆவணப்படுத்தல் தொல்லைகளும் இல்லை.
விரைவாக மீட்கலாம். தவணைக்கட்டண வசதி. முழுமையான இரகசியத்தன்மை.
மேலதிகப்பற்று/தனிநபர் கடன்/கடனட்டைகளை விட குறைந்த வட்டி
தெரிவு செய்யப்பட்ட வங்கிக்கிளைகளில் சனி, ஞாயிறு தினங்களிலும் இச்சேவையை பெற்றுக்கொள்ளலாம்

செலான்
தங்க நகை
அடகுச் சேவை

இல.560, 562, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 3047,
021 222 3755





14%

இப்போது,
சிகரம் சேமிப்புக்கணக்கு
உங்களை மேலும் மேலும்
உயர்த்துகிறது

வருடாந்தம் 14% வரை வட்டியை
உங்கள் சேமிப்பிற்கு பெறுவதோடு
மெறிட் றிவோட்ஸ் சலுகைகளையும்
பெற்று மகிழ்ச்சியடையுங்கள்

| கணக்கு மீதி | அதற்குரிய வட்டிவீதம் |
|---|---|
| ரூ.5,000/- இலிருந்து ரூ.50,000/- வரை | 12.5% வருடாந்தம் |
| ரூ.50,001/- இலிருந்து அதற்கு மேல் | 14% வருடாந்தம் |

(கணக்கை ஆரம்பிக்க ஆகக்குறைந்த வைப்புத்தொகை ரூ. 5000/-)

வேறு சலுகைகள்:
- எண்ணற்ற மீள்பெறுகைகள்
- இலவச சர்வதேச டெபிட்கார்ட் *
- இலவச எஸ்.எம்.எஸ்.மற்றும் இணையத்தள வங்கிவசதி *
- கருமபீடத்தில் சேமிப்புத்தொகையில் 90வீத கடன்வசதி *
- ஆகக்குறைந்த மீதியாக ரூ. 20,000/- த்தை தொடர்ந்து 6 மாதங்களுக்கு கணக்கில் பேணுவதால் நீங்கள் செலான் மெறிட் றிவோட்ஸ் சலுகைகளுக்கு தகுதிபெறுவீர்கள்.
- நாடு முழுவதும் உள்ள ATM ஊடாக 24 மணிநேரமும் உங்கள் கணக்குடன் தொடர்பு கொள்ளும் வசதி.

விரையுங்கள்! அருகிலுள்ள செலான் வங்கிக் கிளைக்குச் சென்று உங்கள் சேமிப்பிற்கு மேலும் மேலும் அதிக வருவாயைப்பெறுங்கள்.

* நிபந்தனைகளுக்கு உட்பட்டது

ஹொட்லைன்: 2456937

செலான்
வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

செலான் சிகரம்
அதிக சேமிப்பு
அதிக வட்டி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் புதுவருடச் சிறப்பு மலர் - 2009

# புதிய ஆண்டிலாவது நல்லதொரு தீர்வு எமக்குக் கிடைக்குமா....

புத்தாண்டு என்ற நாமத்தோடு புதிய நாளொன்று மலரும் புதிய வேளையிது. புது வருடத் தென்றலின் தென்மாங்குடன் 2009 ஆம் ஆண்டு உதயமாகும் நன்நாள். இந்தப் புத்தாண்டைப் புதுமையுடன் வரவேற்று புளகாங்கிதம் கொள்வோம். அமைதி, சமாதானம் என்ற தொனியோடு ஓங்கி ஒலித்துக் கொண்டு புத்தாண்டு எமை நாடி வரும் இவ்வேளையில் எம்மை நாமே தூய்மைப்படுத்திக் கொள்ளத் தயாராக இருப்போம். பகைமை உணர்வுகளை அகற்றி அன்பினால் அனைவரையும் அரவணைத்து ஆதரிக்கும் எண்ணங்களை மனதின் அடி ஆழத்தில் பதித்து ஒற்றுமையாய் சந்தோசத்துடன் வாழ வழிசமைப்போம். விஞ்ஞானத்தின் விந்தையுடன் விளையாடக் கற்றுக் கொண்டவர்களே மெஞ்ஞானத்தின் ஆழமான தன்மைகளையும் தன்னகத்தே கொள்ளுங்கள். ஆன்மீக பலத்தினாலே எமது தாய்த் திருநாட்டை நல்லதொரு நேரியபாதையில் கொண்டு சென்று எமக்குள் வியாபித்திருக்கும் சமூகத்தின் சாக்கடைகளை அடியோடு களைந்து கொள்ள முடியும்.

எமது ஈழத் திருநாடு எத்தனையோ அவலங்களைச் சுமந்த பூமி. சுதந்திரக் காற்றை சுவாசிக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்த – கொண்டிருக்கின்ற காலங்களை நாம் மறக்க முடியாது.

சமாதானம், அமைதி, சுதந்திரம் இத்தனையையும் நாம் அறுவடை செய்வதற்கு எத்தனையோ தியாகங்களை இந்த மண்ணில் புதைத்துள்ளோம். போர் என்ற போர்வையில் அவலச் சாவுகள், இடம் பெயர்வுகள், உறவுகளின் பிரிவுகள், காணாமற் போதல்கள் ... இன்னும் எத்தனை இடர்கள்? இத்தனைக்கும் விடை கொடுக்க எத்தனையோ சவால்கள்.

தமிழ் இனத்தின் எதிர்பார்ப்புகள் ஏமாற்றத்தைக் கொண்டுவந்து எம் இனத்தைப் பார்த்து ஏளனம் செய்தன. இது எம் இனத்தின் விதியா? அல்லது எம்மீது திணிக்கப்பட்ட சதியா? என்ற வினாவுக்கான விடைக்கு இன்னமும் விடை காணப்படாத நிலைமையே உள்ளது.

இத்தனை ஆண்டுகள் நாம் அனுபவித்த அவலங்களுக்கான தீர்வை, புதிய வானில் புதிதாய் மலரும் 2009 எமக்குக் கொடுத்திடுமா? எமக்கு நல்லதொரு தீர்வு கிடைக்க வேண்டும் என்று, புதிய ஆண்டில் எம்மையும் புனிதமானவர்களாக மாற்றி இறைவனிடம் பிரார்த்திப்போம். கலை, கலாசாரம், சமூக விழுமியங்கள் என்பன தமிழருக்குத் தனித்துவமானவை. எமது கலாசார விழுமியங்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம் ஒவ்வொருவரிடமும் உள்ளது. எம் கலாசார விழுமியங்கள்தான் முதியோர் எமக்காகச் சேர்த்து வைத்த சொத்து. இவையே தமிழினத்தின் அடையாளச் சின்னங்கள். இவற்றை அவமானச் சின்னங்களாக மாற்ற நாம் அனுமதிக்கக் கூடாது.

இன்றைய புதுவருட நன்னாளில் தீய சிந்தனைகள், ஒருவரை ஒருவர் பழிவாங்கும் எண்ணங்கள் என்பவற்றை அடியோடு அழித்து நல்ல சிந்தனையுடன், நாட்டில் அமைதியும் சாந்தியும் நிலவ இறைவனைப் பிரார்த்திப்போமாக.★★★★★★★

- எஸ்.கேஷிகன்,
திருநெல்வேலி.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்
யாழ்.நகரில் அனைத்து ரக ஜவுளிகள், றெடிமேட் ஆடைகள், திருமண முகூர்த்தப் பட்டுப்புடைவைகள்,
பான்ஸி வகைகள், பேபி நீட்ஸ் அனைத்துத் தெரிவுகளையும் ஒரே இடத்தில் தெரிவு செய்திட சிறந்த தெரிவுகளின் சாம்ராஜ்யம்.
தரமும் விலையும் எங்கள் பாரம்பரியம்
Happy New Year
G. S. லிங்கநாதன் அன்கோ
சாறித் தெரிவுகளுக்கு: 13, 14, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். ஏனைய அனைத்துத் தெரிவுகளுக்கும்: 47, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம் இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்
DVD
VCR
ABANS Ltd இன் அங்கீகரிக்கப்பட்ட முகவர்
LG Life's Good
JAFFNA ELECTRICALS
Authorised Dealer For
Abans
141, Power House Road, Jaffna.
94 (6) Stanley Road, Jaffna.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்
Brown & Company Limited
சிறப்பு விலைச் சலுகை
இந் நன்நாளில் SHARP வழங்கும் ஜப்பானிய உயர்தொழில் நுட்பத்துடன் கூடிய
★ 01 வருடம் அல்லது 50000 பிரதிகளுக்கு உத்தரவாதம் ★ முதல் 01 வருடத்திற்கு மாதாந்தம் இலவச Services ★ இயந்திரத்துடன் 18000- 18000 (A4) பிரதிகள் எடுக்கக்கூடிய Toner 01, Deveeicper - 01 என்பன இலவசம் ★ சிறப்புத் தேர்ச்சி மிக்க தொழில்நுட்ப வல்லுநர்களால் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படுவதால் விற்பனைக்குப் பிந்திய தரமான நம்பிக்கையான சேவைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதில் என்றும் முன்னணியில் உள்ள ஒரே நிறுவனம்
SHARP DIGITAL PHOTO COPIERS
தொடர்புகளுக்கு: 021 222 4040 Brown & Company Ltd, 89, Stanley Road, Jaffna.

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்
யாழ்.மண்ணில் முதன் முறையாக அறிமுகப்படுத்தபடும் KINETIC HONDA நிறுவனத்தின் தயாரிப்புகள்.
KINE-100CC, SAFARI -.4S-49CC,
இந்திய யப்பான் கூட்டுத் தயாரிப்பு.
மற்றும் யப்பான் மோட்டார் சைக்கிள் MD 90, LANCER C - 50, பற்றறிகள் (PRESIDENT 120 AMP, 95 AMP) LML FREEDOM, LMC SCOOTER உதிரிப்பாகங்கள் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள
நீங்கள் நாட வேண்டிய இடம்
Four Stroke
KINE - 100 CC 4 டிஸ்றோச், 4 Stroke செல்வ் அஸ்ட், கிக்ஸ்ராட், எலோயில்றிம், டிஸ்பிறேக்
SAFARI 4S-49CC 4 Stroke செல்வ் அஸ்ட், கிக்ஸ்ராட், எலோயில்றிம்
S. P. N. மோட்டோர்ஸ்
இல. 145, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் புதுவருடச் சிறப்பு மலர் - 2009

புத்தாண்டே! உன்வரவு நல்வரவு ஆகட்டும்!
பத்தோடு பதினொன்றாய் நீ வந்து போகாமல்
புத்தூக்கம் தாராயோ? இந்து மகா சமுத்திரத்தின்
முத்தெனவே புகழதனைப் பெற்றிலங்கும் சிறப்புடைய
இத் தீவில் எல்லோரும் இசைவுடனே வாழ்ந்திடவே
முத்தான தீர்வொன்று மலர்ந்திடச் செய்வாயே!

புத்தாண்டே
தீர்வொன்று
தருவாய்!

நாயன்மார்கட்டு
ப.மகேந்திரதாசன்.

அன்பர்கள் , நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
எமது இனிய புதுவருட நல்வாழ்த்துக்கள்
★ சகல விதமான புத்தகங்கள், இதர உள்ளீட்டுப் பொருள்கள்
★ அலுவலக உபகரணங்கள், மாணவர்கள் பயன்படுத்தும் பொருள்கள்
உங்கள் தேவை எதுவாயினும் பெற்றுக்கொள்ள....
ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்
இல.212, 214, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்

அனைவருக்கும் புத்தாண்டு
நல் வாழ்த்துக்கள்
ஜனா பாம்
பால் மற்றும்
பால் உற்பத்திப்
பொருள்கள் சுத்தமான பசு
நெய் விற்பனை நிலையம். ஓடருக்கு கேக்
வகைகள், ஐஸ்சிங் கேக், பிறந்தநாள் கேக்
வகைகளும் செய்து கொடுக்கப்படும்.
மல்லாகம் சந்தி, மல்லாகம்.

ALDI ELECTRONICS
No,15 Stanly Road Jaffna
அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
தரமான கணனி
கணனி உதிரிப்பாகங்கள்
கைக்கடிகாரங்கள் (ஆண், பெண்)
பழைய புதிய தமிழ், ஆங்கில திரைப்படங்கள்
பாடல்கள் காமெடிகள்
DVDs VCDs MP3s Audio CDs
MP3 MP4 Player
Computer Software Games CDs



அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்
அசல 22 கரட் நிரம்பிய நவீன வண்ணங்கொண்ட தங்கநகைகளை உங்கள் எண்ணம்போல் தெரிவு செய்து நீங்கள் விரும்பும் தினத்தில் உங்களுக்குத் தருபவர்கள்.
மிகப் பழைமை வாய்ந்த நம்பிக்கையான ஸ்தாபனம்
பொ.அம்பலவாணர் நகை மாளிகை
இல.119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

NSB
Happy New Year
Happy New Year
புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்
தேசிய சேமிப்பு வங்கியின் வாடிக்கையாளர்
அனைவருக்கும் எமது இதயம் கனிந்த
புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்
வரவேற்போம் புத்தாண்டை! 2009 இல் வங்கியின் சேவைகளை
இனிதே பெற்று வாழ்க்கையை சுபீட்சமாக குதூகலத்துடன்
வாழ்ந்திட வாழ்த்துக்கள்







ஓய்வூதியத் திட்டத்தில்
இணைந்து
பிற்காலத்தை
திட்டமிட்டுச் செயற்படுங்கள்

வங்கியின் குதூகல
சேமிப்புக்
கணக்குத் திட்டத்தில்
இணைந்து
குதூகலமாகச்
சேமியுங்கள்

தேசிய சேமிப்பு வங்கி,
NSB யாழ்ப்பாணம் கிளை.

மலரும் புத்தாண்டு அனைவரினதும் வாழ்விலும்
சாந்தியும் சமாதானமும் நிறைந்த
சுபீட்சமான எதிர்காலமாய் மலர உளமார வாழ்த்துகின்றோம்



2009
- உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி.
Hatton National Bank
A quoted public company incorporated in Sri Lanka in March 1970, with limited liability
யாழ்ப்பாணம், சுன்னாகம்,
நெல்லியடி, ஸ்ரான்லி வீதிக் கிளை, மானிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## திரு. தியாகராசா மகேஸ்வரன்

(முன்னாள் இந்து கலாசார அமைச்சர்,
யாழ்ப்பாணம்,
கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்)

**மண்ணில் 10-01-1966**

**விண்ணில் 01-01-2008**

**எம் தெய்வத்தை சுட்டுப்பொசுக்கிய சுடுகாட்டுப் புத்தாண்டே!**

அன்பின் திரு உருவை அருளின் வடிவை
இன்பத்தின் இனிய ஊற்றை
எங்கள் வாழ்வின் விடிவிளக்கை ஏணியான
எம் தெய்வத்தை
சுட்டுப் பொசுக்கிச் சுகம் கண்ட சுடுகாட்டு
புத்தாண்டே
துன்பச் சாகரத்தில் எங்களைத் தோயவைத்த
புத்தாண்டே
அடுத்தாண்டு பிறந்தும் அப்பாவைக் காணாது அழுது புலம்புகிறோம்
அருட்பெரும் ஜோதியில் அப்பா
தனிப் பெருங் கருணையானாரே! -பவதாரணி மகேஸ்வரன்

**கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் நடைபெற்ற அன்னாரின் ஓராண்டு நினைவு நிகழ்வுகளில் கலந்து கொண்ட சகலருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.**

-தகவல்

இல.32,36ஆவது ஒழுங்கை,
வெள்ளவத்தை, கொழும்பு -06.
தொலைபேசி : 2360679

திருமதி விஜயகலா மகேஸ்வரன்,
குழந்தைகள், குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் பஸ்சேவை கட்டணம் குறையும்

கொழும்பு, ஜன. 01

டீசலின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டதைத் தொடர்ந்து பஸ் கட்டணங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகத் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.இது தொடர்பாகக் கூடித் தீர்மானமொன்று எடுக்கவுள்ளதாக சங்கத்தின் தலைவர் கெமுனு விஜயவர்தன நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

டீசல் ஒரு லீற்றரின் விலை 10 ரூபாவால் குறைக்கப்பட்டதால் பஸ் கட்டணத்தை நான்கு வீதத்தால் குறைக்கமுடியும் என்று அமைச்சர் பந்துல குணவர்தன நேற்று முன்தினம் கூறினார்.

இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறு போக்குவரத்து அமைச்சர் டளஸ் அழகப்பெருமவிற்கு அமைச்சரவை வேண்டுகோள் விடுத்துள்ளது என்றும் அவர் சொன்னார். (அ-சி)

## நீர்கொழும்பில் பூசகர் சுட்டுக்கொலை

நீர்கொழும்பு, ஜன.01

நீர்கொழும்பு கடற்கரை வீதியில் உள்ள காளிகோவில் பூசகர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு 9.30 மணியளவில் சுட்டுக் கொல்லப்பட்டார்.

காளிகோவிலிருந்து வீடு நோக்கி வந்துக்கொண்டிருந்த அவரை பின் தொடர்ந்து வந்த ஆயுததாரிகள் அவரது வீட்டுக்கு முன்னால் வைத்து அவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்து விட்டுத் தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார்.

## மக்களுக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி தமது 2009 ஆம் ஆண்டுக்கான புத்தாண்டுச் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

முன்னெப்போதுமில்லாத வகையில் செழிப்பு, அபிவிருத்தி மற்றும் ஐக்கியம் பற்றிய மிகுந்த எதிர்பார்ப்புகளுடன் புத்தாண்டு பிறந்துள்ளது.

பல்வேறு வகையான சவால்களுக்கு முகம் கொடுத்து நாட்டின் அபிவிருத் தியை சரியான பாதையில் இட்டுச்சென்று மக்களின் வாழ்வில் செழிப்பைக் கொண்டு வருவதற்கான சகல நடவடிக்கைகளையும் எனது அரசு மேற்கொண்டுள்ளது. 2009 ஆம் ஆண்டை இராணுவ வீரர்களின் வெற்றியாண்டாகப் பிரகடனப்படுத்தியுள்ளதன் மூலம் பயங்கரவாதத்திலிருந்து நாட்டை விடுவிப்பதற்காக எமது இராணுவ வீரர்கள் முன்னெடுத்துவரும் துணி கரமான நடவடிக்கைகளுக்கு தேசத்தின் கௌரவத்தை வழங்கியுள்ளோம்.

எமது தேசம் வெற்றியின் நுழைவாயி லில் நிற்கும் இவ்வேளையில் நாட்டின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்காக நாம் எல்லோரும் ஐக்கியப்படுவது எம் எல்லோ ருடையதும் பொறுப்பும் கடமையுமாகும்.

பிறந்திருக்கும் புத்தாண்டு தேசத்திற்கு உண்மையான வெற்றிகளைக் கொண்டு வந்து சேர்க்குமாக எனப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் எல்லோருக்கும் எனது மகிழ்ச்சிகரமான புத்தாண்டு வாழ்த்துக்கள் - எனக் கூறியுள்ளார். (அ)

## செலான்வங்கியின் சேவைகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் புதிய பணிப் பாளர்களான ஈ.நாரங் கொட (தலைவர்), லலித் விதான, நிஹால் ஜயமான்ன மற்றும் நோமல் குணவர்த்தன ஆகியோர் பங்குபற்றினர். மத்திய வங்கியின் உயர் அதிகாரி களும் இக்கூட்டத் தில் கலந்து கொண்டனர்.

அன்றைய கூட்டத்தில் -

செலான் வங்கியின் தலைமைத்து வத்தை மத்திய வங்கி தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதோடு செலான் வங்கியின் புதிய பணிப்பாளர் சபையை அமைப்பதற்கும் இலங்கை வங்கி மற்றும் இலங்கை மத்திய வங்கியின் துணையோடு செயற்பட மத்திய வங்கியின் நாணயசபை இறுதியாக முடிவெடுத்துள்ளது. அத்துடன் செலான் வங்கியின் நிதிநிலைமையை ஸ்திரப்பாட்டுடன் வைத்துக்கொள்வ தற்கு இலங்கை மத்திய வங்கியும் மத்திய வங்கியின் நாணய சபையும் இணைந்து நடவடிக்கை எடுத்துள்ளன-

புதிய நடைமுறையானது வங்கித் துறையில் பொது மக்களுக்கு உள்ள நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தியுள்ளது. வங்கி வியாபாரத் தொழிலில் பரந்தளவில் செயற்படும் இலங்கை வங்கி யானது செலான் வங்கியின் வங்கி வியா பாரத் தொழிலுக்கு பின்னின்று மேலும் வலுவூட்டுகிறது. எனவே பொது மக்க ளும் குறிப்பாக செலான் வங்கியின் வாடிக்கையா ளர்களும் தமது வங்கி வியாபாரத் தொழிலை எதுவித தடையுமின்றி இடைவிடாது செய்யலாம் - என்று மத்திய வங்கி யின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்தார் என்று வங்கியினால் விடுக்கப்பட்ட பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## வவுனியாவில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவத்தின் பின்னர் காயமடைந்த படையினர் உடனடியாக அநுராதபுர வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டனர் என வவுனியாப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவத்தின் பின்பு அந்தப் பகுதியில் இராணுவத்தினர் மேலதிக சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர் என்வும் கூறப்பட்டது.

## பரந்தன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரந்தன் நகருக்குள் நுழைந்த படையினர் பரந்தன் வடக்கிலிருந்து செல்லும் ஏ - 9 தரைவழிப் பாதையை மூடியிருக்கின்றனர் என்றும்,நேற்றைய மோதலில் 25 இற்கும் மேற் பட்ட விடுதலைப்புலி உறுப்பினர்கள் உயிரிழந்ததுடன், அவர்களின் 3 சடலங்கள் மற்றும் ஆயுதங்களையும் இராணுவத்தினர் கைப்பற்றியுள்ளனர் எனவும் படைத்தரப்பு தெரிவிக்கிறது.

இதேவேளை, பரந்தன் சந்தியைக் கைப்பற்றும் நோக்கில் நேற்று அதிகாலை 4 மணிமுதல் இராணுவத்தினர் பரந்தன் மேற்குப்புறத் திலிருந்து முன்நகர்வை மேற்கொண்டனர் எனவும்-

அவர்களுக்கு எதிராக விடுதலைப் புலிகள் கடும் எதிர்த்தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர் எனவும் விடுதலைப் புலிகளை மேற்கோள்காட்டி இணையத்தளங்கள் நேற்றுமாலை செய்தி வெளியிட்டன(சி)

## தமிழரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்று தாம் கருதவில்லையெனவும், அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

"எமது மக்களைப் பாதுகாக்கவும் எமது படையணியின் பலத்தை தொடர்ந்து பேணவும் நாங்கள் பல தந்திரோபாய பின் வாங்கல்களை மேற்கொண்டோம் "என நடேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேரமும் இடமும் சரியாக அமையும் போது இழந்த நிலங்களை மீட்போம் என அவர் மேலும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகள் புதிய சமாதானப் பேச்சுக்கள் குறித்த நம்பிக்கையை இழக்கவில்லையென்றும் நடேசன் தெரிவித்துள்ளார்

"நாங்கள் எப்போதும் சமாதான பேச்சுக்கு தயாராகவுள்ளோம். அரசே எப்போதும் இராணுவத் தீர்வை வலியுறுத்துகின்றது" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## வன்னியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணத்தால் காயமடைந் தவர்கள் உயிரி ழக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது என வைத்தியஅதிகாரி சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

ஐ.நிர்மலன் (வயது - 15), எஸ்.ராகுலன் (வயது - 21), அருமைத்துரை ஜெசிநால்ட் (வயது - 26), இராமச்சந்திரன் குமணன் (வயது - 30), செல்வராஜ் குலேந்திரன் (வயது - 33), கே.ஜெயசிறி (வயது - 38), சோமசுந்தரம் சந்திரகுமார் (வயது - 43), அன்னக்கொடிசந்திரமாரி (வயது - 45), வெள்ளைச்சாமி அன்னக்கொடி (வயது - 49), எஸ். பாலசுந்தரம் (வயது - 51), பழனியப்பன் சுப்பிரமணியம் (வயது - 52), ரஞ்சிதமலர் (வயது 58) மற்றும் சரவணபவனந்தன் (வயது - 62) ஆகியோரே படுகாயமடைந் தவர்களாவர்.

சேத்தாங்கண்டி அம்மன்கோவில் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் மாயழகு விஜயரத்தினம் (வயது - 24), நடராசா தவநேசன்(வயது - 36) மற்றும் கொலம்பஸ் (வயது - 24) ஆகியோரே காயமடைந்தனர்.

அதேவேளை, கிளிநொச்சி இரண்டாம் கட்டைப் பகுதிமீது நேற்று இராணுவத்தினர் மேற்கொண்ட ஆட்டிலறித் தாக்குதலில் ரி.சசிகரன் (வயது - 29) மற்றும் கண்ணன் (வயது - 37) ஆகியோர் படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

மேலும் கிளிநொச்சி கரைச்சிப் பிரிவில் உள்ள இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கங்கிளை மீது வான்படை நேற்றுப் பிற்பகல் 12.30 மணியளவில் நடத்திய குண்டுத் தாக்குதலில் நடமாடும் மருத்துவ சேவைப் பிரிவு சேதமடைந்துள் ளதுடன் பொது மக் கள் மூவர் காயமடைந்துள்ளனர்.

மாரிமுத்து வியாகலக்ஸ்மன் (வயது - 24), யூக்கான் கொலம்பியன் (வயது - 24), தவராசா தவநேசன் (வயது - 36) ஆகியோர் காயமடைந் துள்ளனர். (அ-சி)

யாழ். நகரில் திறமை, அனுபவம் வாய்ந்த
இளம் முன்னணி ஆசிரியர்களின் கூட்டணியுடன்
A/L 2011
ஆரம்பம் ஜனவரி 03 சனி காலை 8.30 மணி

கணித, உயிரியல் பிரிவு
இரசாயனவியல்:- S.வாசு
பௌதிகவியல்:- K.செல்வன்
இணை.கணிதம்:- S.யூட
உயிரியல்:- V.A. ஞானேந்திரன்

வர்த்தகப்பிரிவு
கணக்கீடு:- P.பகீரதன்
பொருளியல்:- N.B.கவீதரன்
வணிகக்கல்வி:- V.K.ரவிகரன்

கலைப்பிரிவு
தமிழ்:- A.K.கீர்த்திராஜன்
இந்து நாகரிகம்:- S.பத்மராஜா
பொருளியல்:- N.B.கவீதரன்
நாட.அரங்கியல்:- S.பிரபாகரன்
வரலாறு :- S.சுஜீகரன்
புள்ளிவிபரவியல்:- T.தவசேகர்
அளவையியல்:- P.கமல்
புவியியல்:- S.R.பாவா
அரசியல்:- A.K.றொபின்சன்
கிறிஸ்தவம்:- S.K.யூட
விவசாயம்:- A.நிரோஜன்
English:- S.Jaisan

யாழ். நகரில் கலை, வர்த்தகம், கணித, உயிரியல் பிரிவுகளைத் தன்னகத்தே கொண்ட ஒரேயொரு கல்விநிறுவனம்.
NEC Clock Tower Road, Jaffna (பெருமாள் கோயிலுக்கு அருகாமை)

விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
அரசியல் திரு.றொபின்சன்
A/L 2010 Part I (Sat, Sun 11 a.m.)
A/L 2009 Part II (Sat, Sun 9 a.m.)
ஆரம்பம்: 03.01.2009
அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

அட்சயா புதுவருடத்தை முன்னிட்டு...
புதிய பிரிவுகள் ஆரம்பம்
பேசியல், மேக்கப், கெயா ஸ்ரைல், தலைமுடி அயன் பண்ணுதல், தலைமுடி சுருட்டுதல், கேக் ஐசிங், சாறிவேர்க் (5 விதமானவை), சாறி பிளவுஸ் கட்டிங் (6 விதமானவை), கைவேலை, பூ வேலை மேற்படி பயிற்சி நெறிகள் ஆரம்பம்.
★ றிச் கேக் ஓடருக்கு செய்து கொடுக்கப்படும் (1 - ரூபா 25 மட்டுமே)
அட்சயா இல.461, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

IELTS
Essential English Language examination for higher studies, work or migration purposes in uk, Australia, New Zealand, Canada, USA, etc.



Course Schedule

| | Saturday & Sunday |
|---|---|
| Duration | 10 weeks |
| Time | 08.00am - 11.00 am |
| Commencement | 10th January 2009 |

Latest IELTS material from UK
Guaranteed results
Best Lecturers
Convenient Location

* வகுப்பிலே சேர்ந்து Course முடிவடைந்தாலும் பரீட்சை எடுக்கும் வரை கல்லூரியில் வந்து Listening Practice செய்ய முடியும். அத்தோடு Past Papers பயிற்சியும் செய்து அதி உயர் தரம் வந்த பின் பரீட்சையை எழுதலாம்.
* IELTS பரீட்சைகள் ஒவ்வொருமாதமும் இரண்டு திகதிகளில் BRITISH COUNCIL, COLOMBO இல் நடைபெறும். எமது நிலையத்தின் மூலம் பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும். இங்கிருந்தே Admission Card மற்றும் ஆவணங்களை எடுத்துச் செல்லலாம்.

வகுப்புக்கள் 10.01.2009 இல் ஆரம்பம்.
BRITISH COLLEGE OF ENGLISH
143, Adiyapatham Road, Thirunelvely.
T.P: 0602216027

கலை யூனிவேர்சல் யாழ்.இந்து மகளிர் கல்லூரி அருகே
A/L 2011
ஆரம்பம் 10.01.2008 காலை 7.30 வர்த்தகம்

DMI
A/L 2011
ஜனவரி - 10 காலை 9.00 மணி
நாவலர் வீதி, யாழ். ஸ்ரான்லி வீதி, யாழ்.

இரசாயனவியல்
2011 A/L பிரிவு II
ஆரம்பம்: 02.01.2009 (Friday) Time: 2PM
N.KALA 83/19, ARASADY RD, JAFFNA.

N.C.A. கல்வி நிலையம்
கே.கே.எஸ். றோட், இணுவில்.
A/L 2011
கலை, வர்த்தகம் புதிய பிரிவுகள் ஆரம்பம்
03.01.2009 சனி காலை 8மணி

| | |
|---|---|
| Acc : N.சதீஸ் | Tam : P.மகாலிங்கம் |
| Eco : K.பிரதீபன் | P.பாலமுரளி |
| B.St. : K.பாலசபேஸ் | H.C : M.மயூரன் |
| Log : K.பிரதீபன் | Geo : S.மகிந்தன் |
| Drama : K.சுதா | Pl.Sci.: S.செந்தூரன் |

(சி/556414)

SHAMROCK
ஈச்சமோட்டை, யாழ்.
2011 A/L
கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான வகுப்புகள்
ஆரம்பம் 03.01.2009 Sat 3 p.m.
A/L 2009
Sat Sun 4 - 6 p.m
Mr K. கஜனி B Sc

BRAIN POWER INSTITUTE
யாழ்.நகரின் தனித்துவமான ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவையில்
2011
கலை, வர்த்தகப் பிரிவுகள் ஆரம்பம்
03.01.2009 சனி மாலை 3.00
(81337)

G.A.Q யாழ்.பல்கலைக்கழகம்
ஆங்கிலம் — இலக்கியம், மொழியியல்
விரிவுரையாளர்: சோ.பத்மநாதன்
புதிய ஆண்டிற்கான விரிவுரைகள் ஆரம்பம்: 03.01.2009 காலை 8.00மணி
புதிய உயர் கல்லூரி, ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
(81353)

டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்
சகலவிதமான மோட்டார் சைக்கிள் வாகன உடைந்த பிளாஸ்ரிக் பொருள்கள் அனைத்தும் சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் மீள் திருத்திக் கொடுக்கப்படும்.
உ+ம்: MP 90 செட்டை, Lancer செட்டை, China பிளாஸ்ரிக், Indian பிளாஸ்ரிக்.
இல.06, கனகசபை லேன், K.K.S.றோட், சிவலிங்கப்புளியடி, வண்ணார்பண்ணை.
T.P: 021 222 8680

விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம், 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
32 ஆவது வருட கல்விச் சேவையில் எமது தனித்துவமான ஆசிரியர் குழாமின் ஒன்றிணைந்த சேவையில்
கலை, வர்த்தக வகுப்புகள்
A/L2011 ஆரம்பம் - ஜனவரி 10 8மணி
சமுத்திரம் என்றும் நிலையானது

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 01.01.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# நீதி, நியாயம் பார்த்துச் செயலாற்ற இந்தியத் தரப்பு முன்வர வேண்டும்

'இளக்கமான இரும்பு சிக்கினால் கொல்லன் தூக்கித் தூக்கிக் குத்துவானாம்' - என்று கூறுவார்கள்.

அது போலவே அரசியல்வாதிகளின் போக்கும் பெரும்பாலும் இருப்பது நாம் அவதானிப்பதுதான். இந்த நிலைப்பாட்டுக்குத் தாமும் விதிவிலக்கல்ல என்பதை இந்திய வெளிவிவகார அமைச்சர் பிரணாப் முகர்ஜியும் கோடிட்டுக் காட்டியிருக்கின்றார் - இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில்.

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வாக உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய சமஷ்டி முறையில் அதிகாரத்தைப் பகிரும் திட்டம் குறித்து ஆராய்வதற்கு எழுத்தில் இணங்கிய இலங்கை அரசு - சிறுபான்மையினரான தமிழருக்குத் தான் எழுத்தில் வழங்கிய வாக்குறுதிகளைக் கூடக் காற்றில் பறக்க விட்டு ஏமாற்றும் தனது காலாதி காலப் போக்கின் படி - இப்போதும் அதிலிருந்து விலகிவிட்டது.

இலங்கை அரசுடன் சமஷ்டித் தீர்வு குறித்துப் பேசிய விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் முழு அளவிலான யுத்தத்தை ஆரம்பித்திருக்கும் இலங்கை அரசு, அதில் தனக்கு வெற்றி கிட்டி வருவதான நம்பிக்கை ஏற்பட்டதும் இப்போது தமிழர் தரப்பை இளகிய இரும்பாகக் கருதி எள்ளி நகையாடிச் செயற்படத் தொடங்கிவிட்டது.

வடக்கும், கிழக்கும் ஈழத் தமிழர்களின் வரலாற்று காலப் பாரம்பரியம் கொண்ட தாயக பூமி. அதைப் பிளந்து மாகாண நிர்வாகம் என்று தொடங்கிய இலங்கை அரசுத் தரப்பும், அதில் அங்கம் வகிக்கும் பௌத்த - சிங்களப் பேரினவாதக் கட்சிகளும், இப்போது மாவட்ட சபைகள், கிராம சபைகள் போன்றவற்றுக்கு (இந்தியாவின் 'பஞ்சாயத்து ராஜ்' பாணியில்)அதிகாரத்தைப் பகிர்ந்து, இனப்பிரச்சினையைத் தீர்ப்பது குறித்துப் பேசும் அளவுக்கு திமிரின் - செருக்கின் - உச்சிக்குச் சென்றுவிட்டன.

கொழும்பு அரசுதான், தமிழரின் ஆயுத, அரசியல் பலம் நலிவுற்று விட்டது என்று கருதி, இப்படி 'இளகிய இரும்பைத் தூக்கி அடிக்கும்' கொல்லன் போல செயற்பட எத்தனிக்கின்றது என்று பார்த்தால், இந்திய வெளிவிவகார அமைச்சரின் பேச்சும் அப்படித்தான் இப்போது அமைந்திருக்கிறது.

ஈழத் தமிழர் நலிவடைந்து, பலமிழந்து விட்டார்கள். இனி அவர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் காரியத்தை அணுகலாம் என்ற பாணியில் அமைகின்றது அவரது பேச்சும் போக்கும்.

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக நேற்று முன்தினம் புதுடில்லியில் பிரணாப் முகர்ஜி வெளியிட்ட கருத்துகளில் கீழ்வரும் விடயங்கள் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியவை.

*✱ இலங்கையில் அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு முன்வைத்துள்ள அறிக்கையை அமுல்படுத்துவதே இனப்பிரச்சினைக்குத் தீர்வாக இருக்க முடியும்.*

*✱ இலங்கை - இந்திய உடன்படிக்கை மூலம் உருவான கட்டமைப்பு மற்றும் பேச்சுகள் மூலம் தீர்வு காணவேண்டும்.*

- இவை இரண்டும் அவரது கருத்துகளில் இருந்து சர்ச்சையைத் தோற்றுவிக்கும் அம்சங்களாக வெளிப்பட்டிருக்கின்றன.

இலங்கையின் தற்போதைய அரசு அமைத்துள்ள அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவில், இனப்பிரச்சினையில் சம்பந்தப்பட்ட பிரதான தரப்பான ஈழத் தமிழர்களின் நியாயபூர்வமான பிரதிநிதித்துவம் இடம்பெறவில்லை. நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஈழத் தமிழர்களின் பிரதிநிதிகளில் தொண்ணூறு வீதத்தினரின் பங்களிப்பு இதில் சேர்க்கப்படவேயில்லை. அத்துடன் அரசுக் கூட்டமைப்பில் இருக்கும் கட்சிகளின் ஒன்றிணைப்பு மட்டுமே அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழு. பிரதான எதிர்க் கட்சிகள் அதில் இப்போது தொடர்புபடுவதேயில்லை. - இந்த விடயங்களை எல்லாம் இப்பத்தியில் ஏற்கனவே தெளிவாகவும், விளக்கமாகவும் குறிப்பிட்டிருந்தோம்.

அத்தகைய அனைத்துக் கட்சிக் குழுவின் முடிவின் அடிப்படையில் தீர்வு என்று வலியுறுத்துவதன் மூலம், தென்னிலங்கைச் சிங்களம் போடும் 'பிச்சையை' வேறு வழியின்றி - கேட்டுக் கேள்வியின்றி - தீர்வாக ஏற்கும்படி தமிழர்களைப் பலவந்தப்படுத்த வழி சமைக்கின்றாரோ இந்திய வெளிவிவகார அமைச்சர் என்ற சந்தேகம் ஈழத் தமிழர்களுக்கு எழுகின்றது.

அதேபோல இந்திய - இலங்கை உடன்படிக்கையின் அடிப்படையில் தீர்வு என்றும் அவர் பிரஸ்தாபிக்கின்றார்.

இருபத்தியொரு ஆண்டுகளுக்கு முன்னர் செய்யப்பட்டு, முயற்சித்தும் பலனளிக்காமல், கிடப்பில் போடப்பட்டு தூசு படிந்துபோய்க் கிடக்கும் - உக்கிப்போன - வெறும் ஆவணம் அது.

அந்த ஆவணத்தில் இந்திய நலனுக்கும், தென்னிலங்கை நலனுக்கும் வசதியான சகல அம்சங்களும் இன்னும் நடைமுறையில் உள்ளன. ஆனால் இலங்கை இனப்பிரச்சினையில் பிரதான தரப்பான - அதிகம் பாதிக்கப்பட்ட தரப்பான - ஈழத் தமிழர்களின் நலன்களைக் காப்பாற்றுவதற்கு என்ற பெயரில் இலங்கை மீது இந்தியாவால் 'திணிக்கப்பட்ட' அந்த ஆவணத்தில் ஈழத் தமிழர் நலனுடன் தொடர்புபட்ட எல்லா அம்சங்களும் - வடக்கு, கிழக்கு இணைப்பு வரையான சகல விவகாரங்களும் - கைவிடப்பட்டு விட்டன. அதுதான் உண்மை நிலை.

இந்நிலையில், ஈழத் தமிழர்களைப் பொறுத்தவரை செத்துச் சமாதியாக்கப்பட்டுவிட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் தீர்வு என்ற கதை, இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் தமிழர் நலனைப் புறக்கணித்து, இந்திய மேலாண்மையை நிலை நிறுத்தும் முயற்சியாகவே கருதப்படக்கூடியது.

எனவே, இந்தியா இனிமேலும் தாமதிக்காமல், இலங்கை இனப்பிரச்சினை விடயத்தை நீதி, நியாயம், உண்மை, களநிலைமை, யதார்த்தம் ஆகியவற்றின் அடிப்படையில் சீர்தூக்கிப் பார்த்து, நியாயத்தின் பக்கத்துக்குச் சார்பாகச் செயற்பட முன்வர வேண்டும். - இதுவே தமிழரின் எதிர்பார்ப்பும், புதுவருடப் பிரார்த்தனையுமாகும்.

# கப்பல் மூலம் எடுத்துவரப்பட்ட மாவுக்கு செயலகத்தால் விற்பனை விலை நிர்ணயம்

## பாணின் விலையும் குறைப்பு

யாழ்ப்பாணம், ஜன.1

யால கப்பல் மூலம் யாழ்.மாவட்டத்துக்கு எடுத்துவரப்பட்ட கோதுமை மாவுக்கு விற்பனை விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் இன்று வியாழக்கிழமை முதல் கிலோ 72 ரூபாவாக விற்பனை செய்யப்பட வேண்டும் என யாழ். மாவட்டச் செயலகம் விலை நிர்ணயித்துள்ளது.

அதேபோன்று பாண் ஒன்றின் விலையும் 4 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது. இதுவரை 48 ரூபாவாக விற்கப்பட்ட பாண் 44 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

450 கிராம் பாண் 44 ரூபாவாகவும், 150 கிராம் ரீ பணிஸ் 24 ரூபாவாகவும், கிறீம் பணிஸ் (130 கிராம்) 22 ரூபாவாகவும், சங்கிலி பணிஸ் (130கிராம்) 22 ரூபாவாகவும், கொம்பு பணிஸ் (70 கிராம்) 14 ரூபாவா கவும், அடைக் கேக் 18 ரூபாவாகவும் இன்று முதல் விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மாவின் கொள்வனவு விலையில் கிடைக்கும் கழிவும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் கப்பல் கட்டணத்தைக் குறைத்ததையுமே இந்த விலைக் குறைப்புகளுக்குரிய காரணங்கள் என யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தெரிவித்தார்.

மா உற்பத்திப் பொருள்களை விற்கும் உணவகங்கள் தமது பாவனையாளர்களுக்கு விலைக்குறைப்பின் நன்மையைப் பகிர்ந்தளிக்குமாறு பணிக்கப்படுகின்றார்கள் அல்லது விலைகள் தகுந்த கலந்துரையாட லின் பின் மாவட்ட செயலகத்தால் நிர் ணயிக்கப்படும் எனவும் யாழ்.அரச அதிபர் தெரிவித்துள்ளார். (202)

# திக்கத்தில் சடலம் கரை ஒதுங்கியது

உடுப்பிட்டி,ஜன.1

திக்கம் கடற்கரையில் இனந்தெரியாத ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியுள்ளது.

நேற்று புதன்கிழமை அதிகாலை இந்தச் சடலம் கரையொதுங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

திக்கம், அருணர் வளவு என்னும் இடத்துக்கு அண்மையில் உள்ள கடற்கரையி லேயே இச்சடலம் ஒதுங்கியுள்ளது.

கறுப்பு நிற மழைக்கோட்டும் அரைக் காற்சட்டையும் அணிந்த சுமார் 28 முதல் 30 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலமே கரை ஒதுங்கியது.

நேற்று அதிகாலை கடற்கரைக்குச் சென்ற வர்த்தகர் ஒருவர் இச்சடலத்தைக் கண்டு இராணுவத்தினரிடம் தெரிவித்துள்ளார். அவர்கள் பருத்தித்துறைப் பொலிஸாருக்குத் தெரிவித்து நடவடிக்கைகளை மேற்கொண்டனர். (202-155)

# குடாநாட்டிலும் எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஜன.1

யாழ்.குடாநாட்டிலும் எரிபொருள்களின் விலைகள் நேற்று முதல் குறைக்கப்பட்டுள்ளன.

மண்ணெண்ணெய் 10 ரூபாவாலும் டீசல் 10 ரூபாவாலும், பெற்றோல் 2 ரூபா வாலும் குறைக்கப்பட்டுள்ளன.

அதன்படி மண்எண்ணெய் லீற்றர் 58 ரூபா 60 சதமாகவும், பெற்றோல் 130 ரூபா 50 சதமாகவும், டீசல் 78 ரூபா 60 சதமாகவும் விற்கப்படுகின்றன.

இந்த புதிய விலை நேற்றுக் காலை தொடக்கம் அமுலுக்குக் கொண்டு வரப் பட்டதாகக் கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்திய முகாமையாளர் வி.சண்முக நாதன் அறிவித்துள்ளார். (202- 224)

# வன்னி மக்களுக்கான உதவிகளைத் தடையின்றி வழங்க இலங்கை அரசுக்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும்

## யாழ். ஆயர் அவசர வேண்டுகோள்

வன்னியில் இடம்பெயர்ந்து வாழும் மக்களுக்கான மனிதாபிமான உதவி நடவடிக்கைகளை போதியளவில் தங்கு தடையின்றி மேற்கொள்வதற்கு இந்திய மத்திய அரசு, இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் - என்று யாழ் மாவட்ட ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்திற்கு அனுப்பிய கடிதத்திலேயே அவர் இவ்வாறு கேட்டுக்கொண்டார்.

இந்திய, தமிழக அரசினால் வழங்கப்பட்ட நிவாரணப் பொருள்களுக்கு நன்றி. நான் வன்னியில் சென்று பார்த்த போது தமிழக அரசினால் வழங்கப்பட்ட உணவுப் பொருள்கள் மிகவும் கிரமமான முறையில் விநியோகிக்கப்பட்டு வருகின்றமையைக் காணமுடிந்தது.

வன்னியில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கு உரிய முறையில் மனிதாபிமான உதவிகளை மேற்கொள்ள வேண்டும் என்று இந்திய மத்திய அரசு, இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

# வடமராட்சியில் நிஷாவால் சேதமடைந்த பாடசாலைகளை புனரமைக்க 8.35 மில்லியன் ரூபா தேவை

வடமராட்சி, ஜன.1

'நிஷா' புயல் மழையினால் வடமராட்சிப் பிரதேசத்தில் சேதமடைந்த 80 வீதமான பாடசாலைகளையும் புனரமைக்க 8.35 மில்லியன் ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

இப்பிரதேசத்திலுள்ள 67 பாடசாலைகளில் 52 பாடசாலைகள் சேதமடைந்துள்ளன.

சேதமடைந்த பாடசாலைகளைத் திருத்தி அமைப்பதற்கான நிதி உதவியைப் பெற்றுத்தருமாறு வடமராட்சிக் கல்வி வலயம் யாழ்.அரச அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளது. (202-236)

# கல்ப தரு தினம்

யாழ்ப்பாணம், ஜன.1

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியினர் நடத்தும் கல்பதரு தின நிகழ்வு இன்று வியாழக்கிழமை மாலை 5.30 மணிக்கு மேற்படி சமிதி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பஜனை, விசேட ஆன்மீக உரை, தீப ஆராதனை, பிர சாதம் வழங்கல் ஆகியன இடம்பெறவுள்ளன.

# நீதியும் சமாதானமும் ஒருமைப்பாடும் நிறைந்த சமூகமாக வாழ்வோம்

## தென் இந்தியத் திருச்சபை பேராயர் புதுவருடச் செய்தி

புதுவருடத்தை ஒட்டி தென் இந்தியத் திருச்சபை பேராயர் அதி வண கலாநிதி டி.எஸ்.தியாகராஜா விடுத்துள்ள செய்தி வருமாறு:

2009 எனும் புதிய வருடத்தினுள் பிரவேசித்திருக்கும் அனைத்து மக்களுக்கும் நல்வாழ்த்துக்களைக் கூறுவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

கடந்துபோன வருடம் எம்மக்களைப் பெறுத்தவரையில் அதிக துன்பங்களும், வேதனைகளும் நிறைந்த ஓர் ஆண்டாகும். பெருமூச்சுக்களும், ஏக்கங்களும் நிறைந்தவர்களாகவே இன்னுமோர் ஆண்டினுள் பிரவேசித்துள்ளோம் எனில் அது மிகையாகாது. ஏனெனில் மனித உருவாக்கங்களால் ஏற்பட்ட போரும் அதன் தாக்கங்களும் ஒரு புறம். இயற்கை அனர்த்தங்கள் இன்னுமோர் பக்கம். 2004ஆம் ஆண்டில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட சுனாமி அனர்த்தங்களால் ஏற்பட்ட வடுக்கள் இன்னமுமே ஆறாத நிலையில் நவம்பர் மாதத்தில் எம்மவர்க்கு ஏற்பட்ட இயற்கை அழிவு பேரிழப்பே. சுழற்சியாக எம்மக்களை வாட்டி வதைக்கும் இக்கொடிய துன்பங்களைச் சந்தித்த, அனுபவித்த மக்களாக ஒரு புதிய ஆண்டினுள் பிரவேசிப்பதென்றால் அதில் சங்கடங்களும், ஏக்கங்களும் இருப்பது நியாயமே.

மானட துன்பங்களுக்கு விடை ஏது? நல்லவர்கள் ஏன் துன்பப்பட வேண்டும்? இவ்விதமான வேதனைகள் இறைவனால் தரப்படும் சாபமா? என்றெல்லாம் வினாக்களை மக்கள் எழுப்புவது இயல்பே. அப்படியானால் எங்களுக்கு விடிவே இல்லையா? எதிர்மறையான சிந்திப்பைத் தவிர்த்து நேர்மறையான பார்வையோடும் சிந்தனையோடும் புதிய வருடத்தை அணுகுவது முக்கியம். பன்மறை, பல்கலாசாரம், பல்லினம், பலமொழி முதலிய அம்சங்கள் அடங்கிய எம்முடைய இந்த நாட்டின் அழகுத் தன்மையானது அனைத்தையும் உள்ளடக்குவதான இயல்பு என்பதை மறவாது, புறந்தள்ளும் மனப்பான்மையைத் தவிர்க்கும்போதுதான் இந்நாட்டின் சிறப்பு உறுதிப்படுத்தப்படும்.



பரஸ்பர உறவு பரஸ்பர மதிப்பு, பரஸ்பர அன்பு ஆகியனபேணப்படுதல் அவசியம். யார் பெரியவர் என்றோ அல்லது யார்வெற்றிபெற வேண்டும் என்றோ சிந்தியாது கருத்தொருமிப்பு புரிந்துணர்வு போன்ற சிந்தனைகளுடன் புதிய ஆண்டைத் தொடங்குவோமாக.

பிறர்பால், அதாவது துன்புறும் மக்கள் பேரில், அன்பு காட்டும் பண்பு இத்தகைய விழுமியங்களை நாம் உள்வாங்குவதனூடாக மிளிரும் என்பதில் எவ்வித ஐயுறவும் இருக்கத் தேவையில்லை. பிரச்சினைகளுக்குத் தீர்வு காண மறுசாராரை ஆழ்ந்து கவனிப்பதும், அவர்களுக்குச் செவிமடுப்பதும் மிக அவசியம். அத்தோடு உரையாடலும் அவசியம்.

புதிய ஆண்டில் மக்கள் யாவரும் பெருமூச்சுடன் அல்ல, நிறைவான பெருநிறைவுடன் வாழ்வதற்கு ஏதுவாக அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு நல்கி பன்மைத்துவத் தின் சிறப்பு பேணப்பட்டு நீதியும், சமாதானமும், ஒப்புரவு, ஒருமைப்பாடும் நிறைந்த சமூகமாக வாழுவோம் என எல்லாரையும் அழைக்கிறேன்.

## நாளை

| | |
|---|---|
| மார்கழி 18 | 02.01.2009 |
| | வெள்ளிக்கிழமை |
| திதி: | ஷஷ்டி |
| | பி.ப.01.36வரை |
| நட்சத்திரம்: | பூரட்டாதி |
| | முழுவதும் |
| | விநாயகர் சஷ்டி விரதம் |
| சுபநேரம்: | [illegible] |
| ராகுகாலம்: | 11.00- 12.30 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 ஆம் ஆண்டு நெஞ்சகலா நினைவலைகள்



தோற்றம்
19✶01✶1935

மறைவு
01✶01✶2003

## அமரர் முருகப்பா பழனியப்பன்

(இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன முகவரும், தமிழரசு கட்சியின் ஆரம்பகால உறுப்பினரும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் மூத்த உறுப்பினரும், நல்லூர் கிராம சபையின் முன்னாள் உபதலைவரும், நல்லூர் மக்கள் சனசமூக நிலையத்தின் போசகரும் வன்னியசிங்கம் மண்டபத்தின் ஸ்தாபகரும்)

குன்றின் விளக்காய் திகழும் – நம்
குடும்ப விளக்கே அப்பா!
ஆண்டுகள் ஆறானாலும் ஆறுமோ – நம்
துயரம் ஆறாது அப்பா!
எங்கள் நெஞ்சினில் குடியிருக்கும்
அன்புத் தெய்வமே அப்பா!
எங்கள் வாழ்வு வளமுடன் வாழ
வழிகாட்டிய ஜோதியே அப்பா!
நானிலம் போற்றும் நாட்டுப் பற்றாளனே அப்பா!

உங்கள் புனிதமான ஆன்மா சாந்தியடைய நெஞ்சார
ஆண்டவனை வேண்டிக் கொள்கிறோம்.

ஆடியபாதம் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

நெஞ்சு கனத்த நினைவுகளுடன்:
உங்கள் குடும்பம்.

## வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜன.1

சாவகச்சேரி நகரசபையின் தேசிய வாசிப்பு மாத இறுதி நாள் நிகழ்வு எதிர்வரும் ஆறாம் திகதி நகரசபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

நகரசபை செயலாளர் திருமதி கு.ஆறுமுகம் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராக யாழ்.பிராந்திய உதவி உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி ம.வசந்தகுமார் கலந்துகொள்வார்.

தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கு இந் நிகழ்வில் பரிசில்கள் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (203-207)

## மீண்டும் வாய்க்காலில் குப்பைகள்

யாழ்ப்பாணம்,ஜன.1

யாழ்.அம்மன் வீதியில் உள்ள கால்வாயில் மீண்டும் பொது மக்களால் குப்பைகள், கழிவுகள் போடப்படுவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கால்வாயில் ஏற்கனவே போடப்பட்டுக் குவிந்து கிடந்த குப்பைகளால் இப் பகுதியில் வெள்ளம் வெளியேற முடியாமல் வீடுகளில் உட்புகுந்து சேதங்களை உண்டு பண்ணியிருந்தது தெரிந்தே.

இந் நிலையில் தற்போது கால்வாய் துப்புரவு செய்யப்பட்டுள்ள போதும் மீண்டும் குப்பைக் கழிவுகளைக் குறிப்பிட்ட கால்வாயில் போடப்படுவதாகவும் உரியவர்கள் இதற்கான நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.


தகவல் தொழில் நுட்ப ஒருங்கமைப்பு நிர்வாகத்தின் கீழ்
இலண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய அனுசரணையுடன்,
தகவல் தொழில்நுட்ப பயிற்சி நிலையம் ஆங்கில கற்கை நிலையமும்
140, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 114, டச்சு வீதி, சாவகச்சேரி.

6 வது ஆண்டில் சேவை நோக்குடன் குறைந்த கட்டணத்தில்

I.Basic Computer Application
(Introduction to Computer ,Ms Word,Ms Excel,Ms PowerPoint) Rs750.00 Only

II.Advanced Computer Application(for O/L, A/L Students)
(Introduction to Computer ,Introduction to ICT, Operating System,Microsoft Office ) Rs 1500.00 Only

III.Desktop Publishing
(Adobe Photoshop,Adobe Pagemaker,CorelDRAW ) Rs 1000.00 Only

!V.Internet & e-mail ( 10 Hrs) Rs 1000.00 Only

V.Hardware Technology Rs 2000.00 Only

புதிய பிரிவுகள் ஒவ்வொரு வாரமும் ஆரம்பம்

Online Classes

மேலதிக விபரங்களுக்கு நேரில்



Management & Informatics Studies

MIS புதிய பிரிவுகள் ஆரம்பம் MIS

74., Sabapathy Lane, Thalaiyali, Jaffna. TPNO: 060 221 6083

Diploma in Ms-Office 2003/2007
Diploma in Desktop publishing
Certificate in Internet Technology
Diploma in Hardware Technology
Diploma in Web Designing (Front page/ Dream weaver)
Diploma in VB Programming (with sample project)
Diploma in VB.Net Programming (with SQL server)
Diploma in Java Programming (NetBeans Environment)
Diploma in ASP.Net programming (with SQL server)
Diploma in Linux Fundamentals (Ubuntu / Fedora/ SUSE)
Diploma in Multimedia Technology (Flash MX 2D)
Diploma in Web Development (PHP/ MySQL / Apache)
Diploma in Computer Networking (Windows 2003/Linux)

R.Kumaran- B.Sc.
ஆசிரியரின்
வகுப்புக்கள் யாவும்
இந் நிறுவனத்திலேயே
நடைபெறும்

Batch I 1/ 1/2009-10 am
Batch II 2/ 1/2009 10 am

முற்றுமுழுதான
செய்முறைப் பயிற்சி

அச்சடித்த பாடக்
குறிப்புக்கள்

கணினித் துறையில்
அனுபவத்தைப்
பெற்றவரின்
வழிகாட்டல்

மிகக்குறைந்த
கட்டணம்

ஒவ்வொரு கற்கைநெறி முடிவிலும் சான்றிதழ்கள் உடனடியாக வழங்கப்படும்


# 66 ஆவது மலர்ந்த நினைவுகள் (01.01.1943)



## செம்பியன் செல்வன் ஆறுமுகம் இராஜகோபால்

சுடு பாலை மணலில்
நடு சோலை நிழலாய்
கனி சிந்து மகிழம்
போதிந்து மரமாய்
புயல் வீசி எறியும்
மணற் குன்று வழியில்
தடம் காட்டும் பதிவாய்
தொடரும் உன் சுவடு

மடல் திறக்கையில் ஒரு திங்கள்
மடல் மூடுகையில் மறு திங்கள்
காலத்தின் வேக மாற்றமா
மன வேகத்தின் கோலமா
பார்வையிலே பசுமையின் வடிவங்கள்
கணப் பொழுதிலே வெண் மணல் படலங்கள்

சந்திரா
10,புதுவிதி, அத்தியடி,
யாழ்ப்பாணம்.

புவனம்
இராகுலன்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி சுந்தரம் கனகம்மா



வையகத்துள் மலராக
30.07.1923

வானுறையும் தெய்வமாக
12.01.2008

திதி: பஞ்சமி (01.01.2009)

அன்பின் திருவுருவே! பாசத்தின்
உறைவிடமே! ஆலமர விழுதுகளாய்
எம்மைக் காத்தீரே! அந்தரத்தில்
தவிக்க விட்டு எங்கு சென்றீர்
உங்கள் அன்பின் இடைவெளியை நிரப்ப
யாருண்டு எங்களுக்கு!
ஆண்டுகள் பல கடந்தாலும்– எங்கள்
நெஞ்சம் இருக்கும் வரை சுமந்திருப்போம்
உங்கள் நினைவுகளை.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
மறவன்புலோ, சாவகச்சேரி.

# 14 ஆம் ஆண்டு நினைவில்



## அமரர் சின்னையா இரத்தினம்

(பிரபல வெற்றிலை வியாபாரி, சாவகச்சேரி)
திதி:- பிரதமை
(28.12.2008)

அன்னை மடியில்
26✶05✶1925

அம்மன் அடியில்
01✶01✶1995

அம்மனின் அழகுமணிமகுட இரத்தினமே ஐயா!
ஆண்டுகள் பதின்நான்கு ஆனதே ஐயா!
ஆனாலும் எம்மனங்கள் உமை எண்ணி வாடுதே ஐயா!
வன வாச வாழ்க்கை வாழ்கின்றோம் ஐயா!
அம்மன் துணை கொண்டு விடியலை தர விரைந்து
வந்து ஒளி காட்டுவீரே ஐயா!
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

பெருங்குளம், கற்குழி,
சாவகச்சேரி.

உங்கள் பிரிவால் வாடும்:
இரத்தின வம்சத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்தர்களைத் துயிலெழுப்பி பரமனடி பணிய வைக்கும் மணிவாசகரின் திருவெம்பாவை



சிவனுக்குரிய சிறப்பான விரதங்களுள் ஒன்று திருவெம்பாவை. பாவை நோன்பு என அழைக்கப்படும் இவ்விரதம், மார்கழி மாதத்து திருவாதிரைக்கு முந்திய பத்து நாள்களுக்கு அனுஷ்டிக்கப்படும் ஒரு விரதமாகும்.

திருவாசகத்தின் ஏழாம் பகுதியாகத் திருவெம்பாவைப் பாடல்கள் அமைந்துள்ளன. ‘‘பாவை பாடிய வாயால் ஒரு கோவை பாடுக!’’ என இறைவனே மணிவாசகரைக் கேட்டதாக ஒரு செய்தியுள்ளது. இது திருவெம்பாவை, ஒப்புயர்வற்ற சிறப்புக் கொண்டது என்பதை வெளிப்படுத்துகிறது.

தமிழ் இலக்கிய வரலாற்றில் பாவைப் பாட்டுக்கு நீண்ட வரலாறு உள்ளது. சங்கத் தமிழ் நூல்களுள் ஒன்றான கலித்தொகையில் ‘‘வையெயிற்றவர் நாப்பண் வகையணிப் பொலிந்து நீ, தையினீராடிய தவந்தலைப் பாடுவாயோ’’ என்ற அடிகள், தை நீராடல் பற்றிக் குறிப்பிடுகின்றன.

திருவாசகத்தில் இடம்பெறும் திருவெம்பாவை இருபது பாடல்களைக் கொண்டது. மார்கழி மாதத்தைத் தேவர்கள் புலர் காலைப் பொழுதாகக் கொள்வர். இம்மாதம் பீடை மாதம் என நற்காரியங்களுக்கு விலக்கப்பட்டது. இறை வழிபாட்டிற்கு முதன்மை கொடுப்பதற்காகவே நம்முன்னோர் அவ்வாறு ஏற்படுத்தினர்.

மார்கழி மாதத்தில் சில பெண்கள் தம்முள் கூடி, அதிகாலையில், தோழிப் பெண்களின் இல்லந்தோறும் சென்று, அவர்களையும் துயில் எழுப்பிக் கொண்டு குளத்துக்கு நீராடச் செல்வது போல பாடலின் உள்ளீடு வெளிப்படையாகத் தெரிந்தாலும்,

## திருவெம்பாவை இன்று ஆரம்பம்

இப்பகுதி பக்குவம் முதிர்ந்த ஆன்மா, கர்ம மல இருளில் அழுந்திக் கிடக்கும் பக்குவம் பெறாத ஆன்மாவைத் தட்டி எழுப்பி, இறைவனது அருள் என்னும் நன்னீரில் திளைப்பதற்கு அழைத்துச் செல்வதாகத் தத்துவப்பொருள் கொள்ளப்படுகிறது.

‘‘மல விருளுற்று உறங்காமல் மன்னுபரிபாகரருள், செலமுழுக வருகவெனச் செப்பல் திருவெம்பாவை’’ என்ற திருப்பெருந்துறைப் புராண அடிகள், மேற்போந்த கருத்தை வெளிப்படுத்துகின்றன.

பராசக்தியின் வழிவந்த மனோன்மணி, சர்வபூதமணி, பலப்பிரமதணி, பலவிகரணி, கலவிகரணி, காளி, ரௌத்திரி, சேட்டை, வாமை என்னும் ஒன்பது சக்திகள், தம்முன் முன்னின்ற சக்தி பின்னின்ற சக்தியைத் துயிலெழுப்புவதாகவும் எல்லோரும் கூடி இறைவனைப் பாடுவதாகவும் பொருள் கொள்வோரும் உளர்.

திருவெம்பாவை திருவெண்ணாமலையில் அருளிச்செய்யப்பட்டதாகும். சக்தியை வியந்த பாடல்களாக இதனைக் கொள்வர். சக்தி என்பது திருவருள். திருவருள் பெற்ற பின்பே இறைவனை அடையமுடியுமாகையால் திருவருள் வணக்கம் (சக்தி வணக்கம்) அவசியமாகிறது. இதனாலேயே அம்மை அப்பனாக இறைவனை வழிபடுகிறோம்.

திருவெம்பாவை விரத நாள்கள் பத்திலும், ஆலயங்களிலும் பிற இடங்களிலும் திருவெம்பாவை தவிர ஏனைய திருமுறைகளையும் சேர்த்து ஓதும் செயல் நமது சமூகத்திற்கு ஆரோக்கியமானதல்ல. இது விரத மகத்துவத்தைக் கெடுக்கும் செயல். குளிக்கப் போய்ச் சேறு பூசும் செயல் போன்றதொன்றாகும்.

கண் துயின்று அவமே காலத்தைப் போக்காது, பாவை நோன்பின் தெய்வீகம் மிளிரப் பணி செய்வோம்.

-ச.லலீசன்.

## ‘ஹலோ ரஸ்டின்’ வாகனங்கள் மூலம் கழிவுகள் அகற்றப்படுகின்றன

‘நிஷா’ அனர்த்தம் காரணமாக யாழ்.நகரப் பகுதிகளின் வீதிகளை ஆக்கிரமித்துக் கொண்டு கிடக்கும் மரக்கழிவுகள், குப்பை கூழங்களை அகற்றுவதற்கென ‘ஹலோ ரஸ்ட்’ நிறுவனம் இரண்டு கனரக வாகனங்களை யாழ்.மாநகர சபைக்கு உதவியாக வழங்கியுள்ளது.

தற்சமயம், மாநகர சபைக்குச் சொந்தமான வாகனங்கள், ‘ஹலோ ரஸ்ட்’ வழங்கியுள்ள கனரக வாகனங்கள் ஆகியவற்றின் உதவியுடன் நகரப்பகுதியில் கிடக்கும் கழிவுகளை அகற்றும் பணி வேகமாக இடம்பெற்று வருகின்றது.

விரைவில் நகர வீதிகள் மீண்டும் துப்புரவாக இருக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் மாநகரசபை வட்டாரங்கள் தெரிவித்தன. (203-111)

## தும்பளையில் புதுவருட ஆராதனை

யாழ்ப்பாணம், ஜன.1

பருத்தித்துறை, தும்பளை, அஞ்சலி அகத்தில் இன்று வியாழக்கிழமை மாலை 5 மணிக்குப் புதுவருட ஆராதனை இடம்பெறவுள்ளது.

பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரமத்தின் அனுசரணையுடன் வண. டேமியன் அடிகளார் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. (203)

## சண்டிலிப்பாயில் குளங்கள் புனரமைப்பு

சித்தங்கேணி, ஜன.1

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில், 2009ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டத்தின் கீழ் குளங்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

புனரமைப்புச் செய்யப்படவேண்டிய குளங்களின் விவரங்களை விவசாய சம்மேளனங்கள் ஊடாகத் திரட்டித் தருமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் கேட்டுள்ளார். (203-112)




சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நடத்தும்



வருடாந்த திருவாசக விழா – 2009

காலம்: 02.01.2009 வெள்ளிக்கிழமை காலை 9.30 மணி

இடம்: சந்நிதியான் ஆச்சிரமம்

தலைமையுரை: பிரம்மஸ்ரீ ப.மனோகரக் குருக்கள் (போசகர், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை)

சிறப்புச் சொற்பொழிவு: திரு.ச.லலீசன் (அதிபர், கோப்பாய் றோ.க.த.க. பாடசாலை)

* விடயம்: ‘‘உன் கையிற் பிள்ளை’’
* வாராந்த வெள்ளி நிகழ்வு:
  தவிலிசை: மறவனூர் T.M. வாசகர் குழுவினர்
* மாணவர் நிகழ்வு:
  பண்ணிசைப் போட்டியில் பங்குபற்றி வெற்றிபெற்ற மாணவர்களின் பண்ணிசை நிகழ்வும் தொடர்ந்து பரிசளிப்பும் இடம்பெறும்.

குறிப்பு: ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தில் இடம்பெறும் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து நாயன்மார்களின் திருவுருவப் படங்களும் திருவாசக ஏடுகளும் ஊர்வலமாக எடுத்துவரப்படும்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சந்நிதியான் ஆச்சிரமம்,
செல்வச்சந்நிதி,
தொண்டைமானாறு. (சி/556292)


## 27 ஆவது பிறந்த நாளும் 3ஆம் ஆண்டு நினைவஞ்சலியும்



சிவலிங்கம் சிவரூபன்

பிறப்பு: 14.01.1982 இறப்பு: 01.01.2006

எம் அன்புச் செல்வமே!
எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டுகள்
மூன்று சென்றாலும் உம் நினைவு
எம்மைவிட்டுப் பிரியாதையா.

நீர்வேலி மேற்கு,
மாசிவன். (81310) குடும்பத்தினர்.

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் வேலுப்பிள்ளை செல்லையா (மெம்பர்)

அன்னை மடியில் 31-03-1934

ஆண்டவன் அடியில் 04-01-2006

திதி: பூர்வபக்க பஞ்சமி

அவனியிலே அவதரித்த அன்புத் தெய்வமே!
ஆண்டுகள் மூன்று ஓடி மறைந்த போதும்
இன்புறவே நாம் வாழ இனிது பல செய்து
ஈசனடி போற்றியென நாம் வணங்கும்
ஐங்கரன் பாதமதில் சென்று மறைந்தீரோ
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மிருசுவில் வடக்கு,
மிருசுவில். (81301)
என்றும் உங்கள் நினைவுடன்: குடும்பத்தினர்.

## 1 ஆம் ஆண்டு நினைவலைகள்




திருமதி விபுலானந்தன் பஞ்சரத்தினம் (செட்டி)

ஆண்டொன்று ஆனது அம்மா
அழுது விழி காய்ந்தது அம்மா
கருணை பொங்கும் தாய் உன்னை
காலன் கொண்டு போனதுமேன்?

நெஞ்சில் நிற்கும் ஞாபகங்கள்
நிழலாய் கண்முன் ஆடுதம்மா.....
கடவுளிடம் கேட்டும் விட்டோம் - எம்
தாயின் கருணை உனக்கும் உண்டா?

வஞ்சகரின் வார்த்தை தைத்து
வையகத்தை வெறுத்தாய் அம்மா
ஆண்டுகள் பல போனாலும் உன்
நினைவு மட்டும் எம் நெஞ்சைவிட்டு மாறாதம்மா.

11, சின்னாலங்கண்டு வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம். (81311)
என்றும் உம் நினைவுடன்: பிள்ளைகள், மருமகன்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பர்கள், நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எம் இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்.

முதன் முதலில் வட பகுதியில்....!

* எம்புறோடிங் றை
* பிறிண்டிங் றை
* வெடிங் றை
* எங்கிரேவிங்
மொணிற்ற பச், பிறிபெக்ட் பச்
* மெடல்
* நினைவுக் கேடயங்கள்
* டிஜிற்றல் பிறிண்டிங், இறப்பர் ஸ்ராம்
* பிளாஸ்ரிக் I.C.
* ஸ்கிறீன் பிறிண்டிங்



என்பனவற்றைச் செய்துகொள்ள 18 வருட அனுபவமிக்க....!

**எஸ்.எஸ்.யசோதரன் ஆட்ஸ்**

இல. 212, கோயில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 9607,
0777 110 610.
E.mail: jasotharan arts @ yahoo.Com

HEAD OFFICE:
No.40/2, PIRIWENA ROAD,
RATMALANA, SRI LANKA.
T.P.: 0718 270396.



வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்

எம்மிடம்
அஷ்டலக்ஷ்மி தினக்கலண்டர்
பட மாதக் கலண்டர்
மாதக் கலண்டர்
மற்றும் பாடசாலை உபகரணங்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்.

அஷ்டலக்ஷ்மி புத்தகசாலை,
320, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

அஷ்டலக்ஷ்மி புத்தகசாலை,
14, பஸ் நிலையம்,
யாழ்ப்பாணம்.


## கூட்டம்

யாழ்.பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்களுக்கும், அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமான மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30மணிக்கு பிராந்திய சுகாதாரசேவைகள் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (202)


**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
83, Palaly Road, Kantharmadam, Jaffna
Phone:021 2228093
E-mail: alliancejaffna@yahoo.com

Learn French the French Way

French Classes

இலங்கையிலுள்ள பிரெஞ்சு தூதரகத்தின் மூலமும், Alliance Francaise de Paris இன் மூலமும் மேற்கொள்ளப்படும், பிரெஞ்சு மொழி வகுப்புகளுக்கு, ஆர்வமுள்ள அனைவரும் கற்கலாம்.
புதிய பிரிவுகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன.
வகுப்புகள்: சனி, ஞாயிறுகளில்.
அனுமதிகளை இன்றிலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.
கட்டணம், ஏனைய விவரங்களை நேரில்/ தொலைபேசியின் ஊடாக பெறலாம்.


## முன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் குணமாக

05 ★ 02 ★ 1952



விண்ணில் செல்வமாக

04 ★ 01 ★ 2006

**அமரர் சதாசிவம் குணச்செல்வம்**
(ஓய்வுபெற்ற கிராம சேவகர்)
திதி: பஞ்சமி

பதியொன திகழ்ந்த அப்பாவே!
நதியொனப் பெருகும் உம்நினைவே
நீதியாய் இன்று எம்முடனிருக்க
விதியை நொந்து என்ன பயன்? எங்கள்
போதிமரம் நீர் சாய்ந்ததினால்
வீதியுற்றுப் புலம்புகின்றோம்
ஜோதியே! நீர் அணைந்தாலும்
பாதியாய் வாழ்வீர் என்றும் எம்முள்.

மானிப்பாய். (81342) குடும்பத்தினர்.

## திருவாசக முற்றோதல்

சித்தங்கேணி,ஜன.1

வடலியடைப்பு சித்திவிநாயகர் ஆலயத்தில் திருவாசக முற்றோதல் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறவுள்ளது.

விநாயகர் பெருமானுக்கும் மாணிக்கவாசக சுவாமிகளுக்கும் விசேட தீபாராதனை இடம்பெற்று தொடர்ந்து திருவாசக முற்றோதல் இடம்பெறும். (203-112)

## தவறிவிட்டது

செல்வராசா ஸ்ரீகாந்தன் என்பவரது தே.அ.அ. (783203707V) இராமநாதன் கலட்டிக்கும் இருபாலைச் சந்திக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத் தவர்கள் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: இராமநாதன் வீதி,
கோண்டாவில் றோட், இருபாலை.
கோப்பாய் தெற்கு.
T.P.077 9084167

## கண்ணீர் அஞ்சலி

உடுவில் கல்விக்கோட்ட முகாமைத்துவ உதவியாளர்
திரு.க.வேல்தஞ்சனின் அன்புத் தாய்

**அமரர் கனகநாயகம் திலகவதி**

அவர்களின் மறைவு குறித்து கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உடுவில் கோட்டக் கல்விப்
பணிப்பாளர், அதிபர்கள், மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.

(சி/556421)

## அகவை அறுபதில் அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



யா/இளையதம்பி இந்து
வித்தியாலய அதிபர்

**முருகேசு செல்லையா**

அவர்கள் 35 வருடங்களுக்கு மேல் கல்விப் பணியில் சேவையாற்றி இன்று (01.01.2009) வியாழக்கிழமை ஓய்வுபெறும் எமது அதிபரை நோய் நொடியின்றி குடும்பத்தாருடன் நீடூழி வாழஇறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

வண்ணார்பண்ணை.

ஆசிரிய சமூகம்,
யா/இளையதம்பி இந்து வித்தியாலயம்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
### வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்

27 ★ 07 ★ 1927



மறைவு

02 ★ 12 ★ 2008

**திருமதி சிவானந்தன் சிவபாக்கியம்**

எங்கள் குலவிளக்கு சிவபதமடைந்த செய்தி கேட்டு உதவிய அயலவர்களுக்கும், இறுதிக் கிரியைகள், இறுதி யாத்திரையின் போதும் கலந்து கொண்டோர், தொலைபேசி மூலமாகவும், கண்ணீர் அஞ்சலிகள் மூலமாகவும், பத்திரிகைகள் மூலமாகவும் துயரத்தினைப் பகிர்ந்து கொண்டோர் மற்றும் மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியோர் யாவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (01.01.2009) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக் கிருத்தியத்திலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

55, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## மரண அறிவித்தல்

**திருமதி கதிரவேலு இராஜேஸ்வரி**



மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும், காளி கோயிலடி உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு இராஜேஸ்வரி நேற்று (31.12.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - நாகம்மாவின் செல்வப் புதல்வியும் காலஞ்சென்ற கதிரவேலுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற கருணாநிதி (ராசன்) மற்றும் இராசலட்சுமி, ஜெகதீஸ்வரன் ஆகியோரின் பாசமிகு தாயும் குகதாசன், மாலினி ஆகியோரின் மாமியும் காலஞ்சென்றவர்களான தன பாலசிங்கம், நவரட்ணம் மற்றும் இராசரத்தினம், திருமதி மாணிக்கரத்தினம் (கொழும்பு), விஜயரட்ணம் (லண்டன்), நாகரட்ணம் ஆகியோரின் சகோதரியும் தவமணி, சுந்தரம் ஆகியோரின் மைத்துனியும் தர்ஷனா, தஷாந், தர்ஷா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.01.2009) வியாழக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க.ஜெகதீஸ்வரன் (மகன்).
நி/முகவரி: மயிலிட்டி வடக்கு, மயிலிட்டி.
[illegible]
காளிகோயிலடி உடுவில்.
077 6544558, 060 2219448 (81346)


**IIS** ன் உளமார்ந்த இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்



2009 ம் ஆண்டிற்கான
புதிய பிரிவுகள் ஆரம்பம்

2008 O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே!
உங்களுக்காகவே விசேட கட்டணச் சலுகையில்
ஓர் அரிய சந்தர்ப்பம்

| | | | |
|---|---|---|---|
| Batch 01 | Weekday | 02.01.2009 | At 10.00 a.m. |
| | Weekend | 03.01.2009 | |
| Batch 02 | Weekday | 23.01.2009 | At 10.00 a.m. |
| | Weekend | 24.01.2009 | |

Diploma Courses

01. Diploma in Microsoft Office
02. Diploma in Desk Top Publishing
03. Diploma in Internet Technology
04. Diploma in Hardware Technology
05. Diploma in Computer Programming
06. Diploma in Eng.Drawing & AutoCAD
07. Diploma in Computerized Accounting
08. Diploma in Audio & Video Editing
09. Diploma in Data Base Management System.
10. Diploma in Visual Programming







Certificate Courses

01. Certificate in Auto CAD
02. Certificate in Java Programming
03. Certificate in Visual Basic Programming

INSTITUTE OF INFORMATICS STUDIES
#100, Clock Tower Road, Jaffna.
T.P.No: 021 222 2831 Fax: 021 222 6933 E.Mail: iiscc@sltnet.lk


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org